ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 23 | செப்டம்பர் 1961 | இதழ் 9

ஆதாரக் கல்வியா?
ஆகாத கல்வியா?

“நம்முடைய நாட்டில் கல்வி சிறந்த முறையில் வளர வேண்டுமானால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆதாரக் கல்வியைப் பாடத்திட்டத்திலிருந்து அடியோடு நீக்கிவிட வேண்டும். தற்போதைய ஆதாரக் கல்விமுறை வெறும் ஏமாற்று வித்தையே என்னும் கருத்து என் உள்ளத்தில் நாளுக்குநாள் வலுப்பெற்று வருகிறது. ஆதாரக் கல்வி பாடத்திட்டத்திலிருந்து அகற்றப்படுமானால் கல்வி சிறந்து ஓங்கி வளரும் என்று நம்புகிறேன்.”

அழுத்தந் திருத்தமான இந்த வார்த்தைகளை அளித்திருப்பவர், ஏதும் அறியாதவர் அல்லர்; ஏனோ தானோ அல்லர்; சிறப்பும் செல்வாக்கும் பெருமையும் புகழும் மிக்க பதவியில் வீற்றிருப்பவர். ஆதாரக்கல்வியைப் பற்றி அவருக்கென்ன தெரியும் என்று எடுத்

தெறிந்து பேசத்தக்க நிலையில் இருப்பவர் அல்லர். ஆதாரக் கல்வித் திட்டம் உருவான காலத்திலிருந்து அந்தத் திட்டத்தோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டு அதன் வளர்ச்சிக்காக ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்தவர். எதிர்க் கட்சிப் பிரமுகர்—ஆகவே எந்தக் குறைபாட்டையாவது சுட்டிக்காட்டி ஆளும் கட்சியினர்மீது அவதூறை எழுப்பத்தான் செய்வார் என்று கூறி அவருடைய அறிவுரையை ஒதுக்கித் தள்ளவும் முடியாது. ஏனென்றால் அவர் ஆளும் கட்சியின் பக்கத்திலேயே இருப்பவர்; ஆட்சிப் பீடத்தின் ஓர் உயர்ந்த பகுதியை அலங்கரித்துக் கொண்டிருப்பவர். ஆம்! பீகார் மாநிலத்தின் கவர்னர் என்னும் பொறுப்பும் சிறப்பும் மிகுந்த பதவியில் வீற்றிருக்கும் **டாக்டர் ஜாகீர் உசேன்** அவர்கள்தான் இந்த அறிவுரைக் கொத்தை அளித்திருப்பவர்.

செப்டம்பர் திங்கள் 11—12 ஆகிய நாட்களில் வட இந்தியாவில் உள்ள பச்மாரி என்னும் இடத்தில் பதினைன்காவது அனைத்திந்திய ஆதாரக் கல்வி மாநாடு நடைபெற்றிருக்கிறது. அந்த மாநாட்டின் தலைவருக்கு மாநாட்டை ஒட்டி எழுதிய கடிதத்தில் தான் இந்தக் கருத்துரையைத் தந்திருக்கிறார் டாக்டர் ஜாகிர் உசேன்.

டாக்டர் உசேன், ஆதாரக் கல்வியின் வளர்ச்சிக்காக அரும் பணி ஆற்றியிருக்கும் பேரறிஞர்களில் தலைசிறந்த ஒருவர் ஆவார். ஆதாரக் கல்வியைப் பரப்புவதற்காக வெவ்வேறு சமயங்களில் கூட்டப்பட்ட பல்வேறு மாநாடுகளில் கலந்து கொண்டு அதனை விரைவில் பரப்புவதற்கான ஆய்வுரைகளை ஆர்வத்தோடு எடுத்துரைத்தவர் அவர். பல ஆண்டுகளுக்குமுன் அன்னாரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆதாரக் கல்விக் குழுவின் மூலம்தான் ஆதாரக் கல்வியை இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரப்புவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வழிவகைகள் வகுக்கப் பட்டன. இவ்வாறாக நீண்ட நெடுங்காலமாக ஆதாரக் கல்வித் திட்டத்தோடு இடையறாத தொடர்பு கொண்டுள்ள டாக்டர் ஜாகிர் உசேன், இதுபோது தற்போதைய ஆதாரக் கல்வி முறை வெறும் ஏமாற்று வித்தையே என்று கூறுகிறார் என்றால், நியாயமான காரணங்கள் இல்லாமல் இப்படிக் கூறமாட்டார் என்பது உறுதி.

டாக்டர் ஜாகிர் உசேன் மட்டுமல்ல, இந்த நாட்டில் அளிக்கப் பட்டு வருகிற ஆதாரக் கல்வி முறையை அலசி ஆராய்ந்து பார்க்கிற எவரும் இதே முடிவுக்குத்தான் வரமுடியும். உண்மை நிலைமையை உள்ளது உள்ளபடி இயம்பவேண்டுமானால், ஆதாரக் கல்வி என்றால் என்ன என்னும் கேள்விக்குத் திட்டவட்டமான விடை அளிக்க

வல்லவர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்பதே ஐயத்திற்கு உரியதாகத்தான் இருக்கிறது.

"ஆதாரக் கல்வியே தலைசிறந்த கல்வி"—இப்படி வீர முழக்கம் எழுப்புகிறார்கள் பலர்.

"வாரீர் வாரீர் ஆதாரக் கல்வியைப் பரப்பிட வாரீர்"—இவ்வாறு அன்பழைப்பை அனைவருக்கும் தருகிறார்கள் பலர்.

"ஆதாரக் கல்வியின் வளர்ச்சியே இளைஞர் உலகத்தின் வளர்ச்சி"—இந்த இனிய மொழிகளை எடுத்துக்கூறி நம் இதயங்களுக்கு எழுச்சியூட்டப் பார்க்கிறார்கள் பலர்.

"காந்தியடிகளால் கொண்டு வரப்பட்ட கருப்பஞ்சாறு போன்ற திட்டம்"—இந்தச் சொற்களை எடுத்துக்கூறி ஆதாரக் கல்விக்கு எழிலும் ஏற்றமும் தேடப்பார்க்கிறார்கள் பலர்.

ஆனால் இவர்களிலே ஒருவரால்கூட, ஆதாரக் கல்வி என்றால் இன்னதுதான்—அதன் உருவம் இத்தகையதுதான்—அதன் அடிப்படையும் கொள்கையும் கோட்பாடும் திட்டமும் இன்னின்னவைதான் என்று தெள்ளத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூற இயலவில்லை.

ஆதாரக் கல்வி என்றால் என்ன என்னும் கேள்விக்கு ஆளுக்கு ஒரு விதமாகவும் வேளைக்கு ஒரு வகையாகவும் விடைகூறி வருகிறார்களே தவிர, தெளிவான பதிலை ஒழுங்கான முறையில் திட்டமான வகையில் எடுத்துக் கூறுவோர் எவரும் இல்லை.

இந்த உண்மையை நன்றாக அறிந்த காரணத்தால்தான், 'கல்கி' இதழின் ஆசிரியராக விளங்கிப் பெரும்புகழ்பெற்ற திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு முறை அந்த இதழின் தலையங்கத்தில், "நாம் அறிந்த வரையில் ஆதாரக் கல்வி என்றால் இன்னது என்பதை நன்றாகத் தெரிந்தவர் ஒரே ஒருவர்தான் இருந்தார்—அவரும் இறந்துவிட்டார்—அவர்தான் காந்தியடிகள்" என்று குறிப்பிட்டிருந்தார். ஆதாரக் கல்வியைப்பற்றி எண்ணிப்பார்க்கும்போதெல்லாம் நமக்கு இந்த வாசகம்தான் நினைவுக்கு வருவது வழக்கம். ஏனென்றால் ஆதாரக் கல்வியின் இன்றைய நிலைமையைப் படம் பிடித்ததுபோல எடுத்துக்காட்டியிருக்கிறது இந்த வாசகம்.

ஏதாவது ஒரு கைத்தொழிலை அடிப்படையாக வைத்து, அந்தக் கைத்தொழிலின் மூலமாகவே எல்லாப் பாடங்களையும் போதிக்க வேண்டும் என்பதுதான் ஆதாரக்கல்வியின் அடிப்படை நோக்கம் என்று சில சமயங்களில் சில அமைச்சர்களால் முழங்கப்படுகிறது.

இதுதான் ஆதாரக் கல்வியின் நோக்கம் என்றால் இந்த நோக்கம் ஒரு நாளும் நிறைவேற முடியாது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூற வேண்டியது நம்முடைய கடமையாகும். தக்ளியைச் சுற்று விதோ, இராட்டையைச் சுழற்றுவதோ, கூடையை முடைவதோ, பாய் பின்னுவதோ, தறிநெய்வதோ, எந்தக் கைத்தொழிலாக இருந்தாலும் அந்தக் கைத்தொழிலின் வாயிலாகவே எப்படி எல்லாப் பாடங்களையும் பயிற்றுவிக்கமுடியும்? தமிழ், ஆங்கிலம், வரலாறு, நிலநூல், இயற்கை, கணக்கு, அறிவியல் முதலிய பல்வேறு பாடங்களைத் தறி நெய்வதன் மூலமாகவோ கூடை முடைவதன் வாயிலாகவோ எப்படிச் சொல்லித் தரமுடியும்? இது இயலாத செயல் என்பதற்கு விளக்கமா வேண்டும்? கைப்புண்ணுக்குக் கண்ணாடியா தேவை? கூடை முடைவதற்காக என்று ஒரு மணி நேரத்தை ஒதுக்கினால் அந்த ஒரு மணியில், கூடை முடைவது எப்படி என்பதைப் பற்றித்தான் சொல்லித்தர முடியுமே தவிர, கூடை முடைவதன் வாயிலாகத் தமிழை எப்படிச் சொல்லித் தர இயலும்? கணக்கை எப்படிச் சொல்லித் தர இயலும்? நில நூலை அல்லது விலங்கு நூலை அல்லது பயிர் நூலை எப்படிச் சொல்லித் தர முடியும்?

ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகள், தங்கள் கல்விக்குத் தேவையான பணத்தை அந்தக் கல்வியின் மூலமாகவே சம்பாதித்து விடவேண்டும்—அப்படிச் சம்பாதிப்பதற்கு ஏற்ற வகையில் கல்வி முறை அமையவேண்டும்—அப்படி அமைந்துள்ள கல்வி முறைக்குத்தான் ஆதாரக் கல்வி என்று பெயர் என்று சில சமயங்களில் தெரிவிக்கப்படுகிறது. இந்த நோக்கம் ஆதாரக் கல்விக்கு இருப்பது உண்மையானால் ஆதாரக் கல்வியை ஒழித்துக்கட்டுவதை விட உன்னதமான தொண்டு—உயர்வுமிகுந்த பணி வேறு இருக்க முடியாது.

அன்றலர்ந்த செந்தாமரைகள் எனக் காட்சி தரும் சின்னஞ் சிறு பிள்ளைகளை ஏதாவது ஒரு தொழில் செய்யும்படி வற்புறுத்துவது ஜீவகாருண்யம் அற்ற செயல் என்பதை உலகம் ஒப்புக்கொண்டு நெடுங்காலம் ஆகிவிட்டது. பதினான்கு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளை எந்த முதலாளியும் தன் தொழிற்சாலையில் வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது என்னும் சட்டம் பல்வேறு நாடுகளில் இன்றைய தினம் நடைமுறையில் இருந்துவருகிறது. முல்லை மொக்குகளோ அல்லது மல்லிகை அரும்புகளோ எனக் காட்சிதரும் சின்னஞ் சிறு குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் இட்டு வாட்டுவது இரக்கம் அற்ற செயல் என்ற காரணத்தாலேயே இப்படிப்பட்ட சட்டம் உலகம் முழுவதிலும் நடைமுறையில் இருக்கிறது.

தொழிற்சாலைகளில் தொழில் என்னும் பெயரால் இளம் பிள்ளைகளிடமிருந்து வேலை வாங்குவதே இரக்கமற்ற செயல் என்று கருதித் தடுக்கப்படும்போது, அதே தொழிலை அதே பிள்ளைகளிடமிருந்து, தொழிற்சாலைகளுக்குப் பதிலாகப் பள்ளிக்கூடங்களில், தொழில் என்னும் பெயருக்குப் பதிலாகக் கல்வி என்னும் பெயரால் பெறுவது மட்டும் எப்படி நியாயமான செயலாகிவிடும் ?

தொழிற்சாலைகளில் இளம்பிள்ளைகளை வற்புறுத்தி வேலை வாங்குவது எப்படித் தவறாகுமோ அப்படியேதான் பள்ளிக்கூடங்களில் இளம்பிள்ளைகளைத் தொந்தரவுக்கு ஆளாக்கித் தொழில் புரியும்படி வற்புறுத்துவதும் தவறாகும். இப்படி வற்புறுத்தி வேலை வாங்கும் முறைக்குப் பெயர்தான் கல்வி என்று சொன்னால் அதனை யார் ஏற்றுக்கொள்ளமுடியும் ?

பள்ளிக்கூடங்களில் தொழிற்கல்வி என்னும் பெயரால் பிள்ளைகளைப் பல்வேறு பண்டங்கள் செய்யும்படி வற்புறுத்துவது—அப்படிச் செய்யப்பட்ட பண்டங்களை மார்க்கெட்டில் விலைகூறி விற்பது— அப்படி விற்று வந்த தொகையைக் கொண்டு ஆசிரியர்கட்கு ஊதியம் அளித்துவிட்டுப் பள்ளிக்கூடத்தின் ஏனைய செலவுகளையும் சரிக்கட்டுவது என்பது நடக்கக்கூடிய செயலா ? சென்ற பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் ஆதாரக் கல்வித் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அந்தப் பள்ளிக்கூடங்கள் யாவும், மாணவர்கள் தருகிற சம்பளம்— அரசாங்கத்தார் அளிக்கிற உதவித் தொகை ஆகியவற்றைக் கொண்டுதான் நடத்தப்பட்டு வருகின்றனவே தவிர, அந்தப் பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள் செய்த பண்டங்களின் விற்பனைத் தொகையைக் கொண்டா நடத்தப்படுகின்றன ? நாம் அறிந்தவரையில் ஒரே ஒரு பள்ளிக்கூடத்தில்கூட பள்ளி மாணவர்களால் செய்யப்பட்ட பண்டங்களின் விற்பனைத் தொகையைக் கொண்டே பள்ளிச் செலவு முழுவதையும் ஈடுகட்டியதாகத் தெரியவில்லை. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது ஆதாரக் கல்வித் திட்டம் முழுத் தோல்வியையே அடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் அது அப்படியில்லாமல், வெற்றி பெறுகிறது என்று வாதத்திற்காகக் கற்பனை செய்துகொண்டு பார்த்தாலும், அந்த வெற்றியால், கல்வித் துறைக்கு நஷ்டமே தவிர இலாபம் என்ன ?

ஆதாரக் கல்வி வெற்றிபெற வேண்டுமானால், பள்ளிக்கூடச் செலவுக்கான முழுத்தொகையை அல்லது அதில் ஒரு பெரும் பகுதியை, பள்ளிச் சிறுவர்களின் தொழில்களிலிருந்து நாம் பெற்

றாக வேண்டும். ஆனால் அத்துணைப் பெருந்தொகை பள்ளிச் சிறுவர்களின் தொழில்களிலிருந்து கிடைத்தாக வேண்டுமானால் அந்தச் சிறுவர்கள் நாள்முழுவதும் ஓயாமல் உழைத்தாக வேண்டும். அவர்கள் அப்படி உழைப்பது என்று தொடங்கிவிட்டால், உழைத்து உழைத்து உருமாறுவதற்குத்தான் அவர்களுக்கு நேரம் இருக்க முடியுமே தவிர, தாய்மொழி, வரலாறு, அறிவியல், நிலநூல், கணக்கு முதலிய அறிவுத் துறைக் கல்வியைப் பெறுவதற்கு அவர்களுக்கு ஓய்வு எங்கிருந்து கிடைக்க முடியும்?

ஆகவே, ஆதாரக் கல்வித் திட்டம் வெற்றி பெற்றுவிட்டது என்கிற நிலை உருவாக வேண்டுமானால், பள்ளிக்கூடங்கள், பள்ளிக்கூடங்களாக இருக்கக்கூடாது. தொழிற்சாலைகளாக மாறிவிட வேண்டும். ஆனால் பள்ளிக்கூடங்கள் தொழிற்சாலைகளாக மாறி, மாணவக் குழந்தைகள் உழைக்கும் பாட்டாளிகளாகப் புதுநிலை பெற்றுவிட்டால், அந்த நிலையில் அவர்கள் பெறுகிற பயிற்சிக்குப் பெயர் கல்வி என்று எப்படி இருக்கமுடியும்?

அதுமட்டும் அல்ல. ஆரம்பக்கல்வியை இளம் பிள்ளைகளுக்கு அளிப்பதற்குத் தேவையான பணத்தை எங்களால் தேடித்தர இயலாது— அதனை அந்தப் பிள்ளைகளேதான் தங்களுடைய தொழில் மூலமாகவேதான் திரட்டிக்கொள்ள வேண்டும் என்று சொல்லாமற் சொல்வது போல அல்லவா அமைந்துள்ளது ஆதாரக் கல்வித் திட்டம்? இப்படிச் சொல்லுவதைவிட நம்முடைய சமுதாயத்திற்கே அவமானத்தைத் தரும் செயல் வேறென்ன இருக்க முடியும்?

இந்த உண்மைகளையெல்லாம் நன்றாக அறிந்த காரணத்தால் தான் பீகார் கவர்னர் டாக்டர் ஜாகீர் உசேன், இந்த நாட்டின் கல்வி சிறந்த முறையில் வளரவேண்டுமானால் ஆதாரக் கல்வி முறையைப் பாடதிட்டத்திலிருந்து முற்றிலும் நீக்கிவிடவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டு ஆட்சி, கல்வித்துறை, பொருளாதார அநுபவம் ஆகிய பல துறைகளிலேயும், ஆழ்ந்த புலமையும் தேர்ந்த பயிற்சியும் படைத்த சர் மிர்சா இஸ்மெயில் அவர்களும், சில ஆண்டுகளுக்கு முன், இராஜபுதனப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் உரை ஆற்றியபோது இதே கருத்தைத்தான் தெரிவித்துள்ளார்.

“ஆதாரக் கல்வித் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள், நாகரிக வாழ்வுக்கு ஒவ்வாதவை என்றே எனக்குத் தோன்றுகின்றன. அந்தத் திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள் இரண்டு என்று நான் கருதுகிறேன். ஆரம்பப் பள்ளி மாணவர்கள் ஏதாவது ஒரு

தொழில் செய்வதன் மூலமாகத்தான் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதும், அப்படிச் செய்யப்படும் பண்டங்களை விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு பள்ளிச் செலவைச் சரிக்கட்ட வேண்டும் என்பதும் ஒரு நோக்கம். புத்தகங்களின் மூலமாகப் பெறுகிற கல்வியை மிகவும் குறைந்த அளவினதாக ஆக்கிவிட வேண்டும் என்பது மற்றொரு நோக்கம். இந்த இரண்டு நோக்கங்களுமே நாகரிக உணர்ச்சிக்கு ஏற்றன அல்ல என்பது என் கருத்து."

அந்நாளில் சர் மிர்சா இஸ்மெயில் தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்கள் இந்நாளில் டாக்டர் ஜாகிர் உசேன் அளித்துள்ள அறிவுரையைப் போலவே அமைந்துள்ளன அல்லவா ?

"பள்ளிக் குழந்தைகளைத் தொழிற்சாலைப் பாட்டாளிகளாக மாற்றும் இச் செயலுக்குக் கல்வி என்கிற பெயர் நிச்சயமாகப் பொருந்தாது. ஆரம்பக் கல்விக்குத் தேவைப்படும் பணத்தை அரசாங்கம்தான் தரவேண்டுமே தவிர அதனைப் பள்ளிச் சிறுவர்களின் தொழில் மூலமாகத் திரட்டப் பார்ப்பது முறையான செயல் அல்ல. ஏதாவது ஒரு கைத்தொழிலை, வியாபார நோக்கம் இல்லாமல், பொதுக் கல்விக்கு இடையூறு ஏற்படாத வகையில், சிறிதளவு சொல்லித் தருவதில் தவறில்லை. ஆனால் கல்வியின் பெரும்பகுதி, புத்தகங்களின் மூலமாகத்தான் புகட்டப்பட வேண்டும்."

இந்த வார்த்தைகளும் அந்நாளில் சர் மிர்சா அவர்களால் அளிக்கப்பட்டவையே. நாட்டு நலனில் நாட்டம் படைத்தோர் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஏற்றம் மிக்க சொற்கள் இவை.

டாக்டர் ஜாகிர் உசேன், சர் மிர்சா இஸ்மெயில் ஆகியோர் மட்டுமல்ல, ஆதாரக் கல்வித் திட்டத்தின் நோக்கங்களையும் நடைமுறைகளையும் ஆராய்ந்து பார்க்கும் நடுநிலையாளர் எவரும், **ஆதாரக் கல்வித் திட்டம், நாட்டிற்கு ஆகாத கல்வித் திட்டமே** என்னும் முடிவுக்குத்தான் வருவர்.

இவ்வளவு குறைபாடுகளும் கோணல்களும் மிகுந்த ஒரு திட்டம் எப்படி மிகப் பரவலான அளவில் நுழைக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், அரசியல் வாதிகளால் கல்வித் துறையில் உண்டாக்கப்பட்ட குழப்பமே இது என்பது தெளிவாக விளங்கும். ஆதாரக் கல்வித் திட்டமானது 'இந்த நாட்டுக்குத் தேவையா இல்லையா என்னும் பிரச்சினையை முடிவு செய்யும் பொறுப்பு, அரசியல்வாதிகளிடம் விடப்படாமல் கல்வி நிபுணர்களிடம் விடப்பட்டிருந்தால், ஆதாரக் கல்வித் திட்டம் இந்த நாட்டில் நடைமுறைக்கு வந்தே இருக்காது. இவ்வளவு குற்றங்களும் குறைகளும் சீர்கேடுகளும் மலிந்த ஒரு திட்டத்தை கல்வி நிபுணர்

கள் ஒருக்காலும் ஒப்புக்கொண்டிருக்க மாட்டார்கள். கல்வித் துறையில் ஆளும் கட்சியினரும் அரசியல்வாதிகளும் குறுக்கிடுவதால் இத்தகைய கோளாறுகள் பற்பல உருவாகி நாட்டின் நலன் கெடுகிறது என்பதை நன்றாக உணர்ந்த காரணத்தால் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் அண்மையில் பெங்களூர் நகரில் சொற்பொழிவாற்றுகையில் கல்வித் துறையில் அரசியல்வாதிகளின் தலையீடு இருத்தல் கூடாது என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த உண்மைகளையெல்லாம் நன்றாக உணர்ந்து இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் ஆதாரக் கல்வித் திட்டத்தைப் பாடதிட்டத்திலிருந்து முற்றிலும் நீக்கிவிடுவார்களானல் ஆரம்பக் கல்வியானது செழித்து ஓங்கி வளரும் என்பது உறுதியினும் உறுதியாகும்.

தலைவராகப் பணியாற்றும் டாக்டர் இராதாகிருஷ்ணன்

இந்தியக் குடியரசின் தலைவர் டாக்டர் இராசேந்திரப் பிரசாத் அவர்கள் உடல் நலம் குன்றியிருக்கும் காரணத்தால், துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், சென்ற சில வாரங்களாகத் தற்காலத் தலைவராகப் பணியாற்றி வருகிறார் என்பது அனைவரும் அறிந்த செய்தியே.

உயர்ந்த அறிவும் சிறந்த பண்பும் இளகிய இதயமும் இனிமையான நடத்தையும் படைத்த டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், சென்ற சில ஆண்டுகளாக இந்தியக் குடியரசின் துணைத் தலைவராக விளங்கி, அவர் அந்தப் பணியைப் பொறுப்போடும் சிறப்போடும் ஆற்றிய முறையின் விளைவாக அனைவருடைய உள்ளத்தையும் தட்டிப் பறித்துக் கொண்டிருக்கிறார். எந்தப் பிரச்சினையையும் அமைதியான முறையில் இருந்து, பொறுமையான வகையில் ஆராய்ந்து, தொடர்புள்ள அனைவரும் ஏற்கத்தக்க முடிவுகளை உருவாக்கித் தருவதில் அவர் கைதேர்ந்த வல்லமை படைத்தவராக விளங்குகின்றார். அவர் அவ்வப்போது ஆற்றுகிற சொற்பொழிவுகள் அவருடைய தலைசிறந்த புலமையையும், பரந்த நோக்கத்தையும் எடுத்துக் காட்டும் எழில் படைத்தனவாக ஒளி வீசித் திகழ்கின்றன. சிறப்பாகவும் குறிப்பாகவும் சென்ற மாதத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பட்டமளிப்பு விழாவின்போது அவர் ஆற்றிய விரிவுரை சிந்தனைக்கு விருந்தளிக்கும் சீர்சால் சிறப்புடையதாக

அமைந்துள்ளதுகண்டு அறிஞர் உலகம் மட்டற்ற மகிழ்ச்சி எய்தியது.

தற்போதைய குடியரசுத் தலைவரின் பதவிக் காலம் முடிவுற்றதும் அடுத்த முறை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களே அந்தப் பெரும் பதவியில் அமர்த்தப்படுவார் என்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது. அந்த உயரிய பதவிக்கு உரிய எல்லாவகைத் தகுதிகளும் ஒருங்கே அமையப் பெற்றவர் அவர் என்பதை யாரே மறுக்க இயலும் ?

உலக அரங்கத்தில் இந்தியாவின் புகழை நிலைநாட்டிவரும் பேரறிஞர்களில் ஒருவராகத் திகழும் டாக்டர் இராதாகிருஷ்ணன் பன்னெடுங்காலம் வாழ்ந்து நம் நாட்டின் புகழை மேலும் உயர்த்த வேண்டும் என்று மனமார ஆசைப்படுகிறோம்.

வாழ்க டாக்டர் இராதாகிருஷ்ணன்! வளர்க அவர் புகழ் !

திரு நெ. து. சுந்தர வடிவேலு

அவர்களின்

இரஷ்யப் பயணம்

தமிழ்நாடு கல்வித் துறை நெறியாளர் திரு நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள், இந்திய அரசாங்கக் கூட்டுக் கல்வி ஆலோசகர் திரு இராஜராய்சிங், பஞ்சாப் கல்வித் துறை நெறியாளர் குமாரி சாரளா கன்னு ஆகியோருடன் 15-9-61 அன்று புது டில்லியிலிருந்து வானூர்திமூலம் சோவியத் இரஷ்யாவுக்குச் சென்றுள்ளார். சோவியத் இரஷ்யாவில் பள்ளிக்கூடங்கள் செயல்படுகிற முறையையும் கல்வித் திட்டம் அமைந்துள்ள வகையையும் நேரில் கண்டறிந்து வருவதற்காக இந்திய அரசினரால் மூவர் கொண்ட இக் குழு அனுப்பப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டம், சீருடை வழங்கும் திட்டம் முதலிய பல திட்டங்களை உருவாக்கிப் பெரும் புகழ் பெற்றுள்ள திரு சுந்தர வடிவேலு அவர்களின் இரஷ்யப் பயணம் சிறப்பு மிகுந்ததாகவும் வெற்றி நிறைந்ததாகவும் அமைவதாக என மனமார வாழ்த்துகிறோம்.

நீவிர் அறிவீரா ?

கடல் அலையிலிருந்து மின்சார உற்பத்தி

இரஷ்யாவின் சாதனை

கடல் அலைகளால் இயங்கும் மின்சார உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான திட்டமொன்றை ரஷ்யா தயாரித்து இருக்கிறது.

அத்தகைய மின்சார நிலையத்தைக் கடற்கரையோரமாக அமைக்கும் வேலை 1964-ல் பூர்த்தியடையும் என்று சோவியத் யூனியன் தெரிவித்தது.

முதலில் அமைக்கப்படும் நிலையம் ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும். அடுத்த இரு பதாண்டுகளில் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய பெரிய நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

கடல் அலைகளால் இயங்கக் கூடிய மின்சார நிலையங்களின் இயந்திர அமைப்பு முறைகளைப் பற்றிய விவரத்தை, ரஷ்யா வெளியிட வில்லை.

ரூ. 15க்கு விற்க ரூ. 500 செலவு !

கிழடு தட்டிய போலீஸ் இலாகா குதிரை ஒன்று விற்பனை சம்பந்தமான விளம்பரத்துக்குக் கேரள அரசாங்கம் ரூ. 500 வரை செலவிட்டது.

ஆனால் கடைசியில் அந்த குதிரை விற்கப்பட்டதோ ரூ. 15-க்கேயாகும். இலாகாவின் சட்டவிதிகளின்படி அரசாங்கக் குதிரைகள் முதலிய விலங்குகளை விற்க நேரிட்டால் அவ்விதம் விற்கப்படுவதன் முன் இது பற்றி பத்திரிகை முதலியவைகளில் விளம்பரம் செய்தாகவேண்டும். இதன்படி விற்பனை சம்பந்தமாக கேரள அரசாங்கம் கேரளத்தில் மாத்திரமல்லாமல் அண்டைய ராஜ்யங்களிலும் விளம்பரம் செய்தது. நல்ல விலை கிடைக்கச் செய்ய இப்படி பரந்த அளவில் விளம்பரம் செய்தனராம்.

ஏழுமலையானுக்குக் கிராமபோன் பெட்டி !

பக்தரின் நூதன காணிக்கை

ஏழுமலையானுக்கு அவரது பக்தர்கள் தங்களது பக்தியையும் அன்பையும் காட்ட எவ்வளவோ விதமான காணிக்கைகளை உண்டியலில் செலுத்துகின்றனர். ஆனால் இதுவரை எவரும் செலுத்தாத காணிக்கை உண்டியல் பெட்டியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற 4-ம் தேதி உண்டியலைத் திறந்தபொழுது அனைவரும் ஆச்சரியமும் வியப்பும் அடையும் விதத்தில் ஒரு கிராமபோன்

பெட்டி கண்டு பிடிக்கப்பட்டது. அதைத் திறந்து பார்த்தபோது 10 ரிகார்டுகளும் இருந்தன. காணிக்கையை எந்தப்பக்தர் ஏன் செலுத்தினரோ தெரியவில்லை.

மொழி பெயர்க்கும் இயந்திரம் !

பிறமொழிகளில் மொழி பெயர்க்கும் இயந்திரங்கள் இன்னும் ஒருவருட காலத்தில் பிரிட்டன், அமெரிக்கா ஆகிய இடங்களில் விற்பனைக்கு வரும். இத் தகவலைத் தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ. எம். உத்லே நேற்று சர்வதேச மொழிபெயர்ப்பு இயந்திரங்கள் மாநாட்டில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். விஞ்ஞான தொழில் வார்த்தைகளை மணி ஒன்றிற்கு 3500 வார்த்தைகள்வீதம் மொழி பெயர்க்கப்படும். இது இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் சாத்யமாகுமென்றார்.

ரூ. 18,846-க்குகட்டடம் வாங்கி ரூ. 690-க்குவிற்பனை.

சர்க்காருக்கு ரூ. 26,742 நஷ்டம்

அரசாங்கத் தணிக்கை அறிக்கை வெளிப்படுத்தும் தண்டச் செலவு

ஒரு பழைய கட்டிடத்தை சரிவர பார்த்து வாங்காததினால் தமிழ்நாடு சர்க்காருக்கு ரூ. 26, 742 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு பழைய கட்டிடம் ரூ. 18,846-க்கு வாங்கப்பட்டது. நான்கு வருடங்கள் கழித்து அதே கட்டிடம் ரூ. 690-க்கு விற்கப்பட்டது. நான்கு வருடங்களாகக் காவலாளிக்குக்கொடுத்த சம்பளம், அதை விற்க ஏற்பட்ட விளம்பரச் செலவு எல்லாமாகச் சேர்ந்து தமிழ் நாடு சர்க்காருக்கு நிகர நஷ்டம் ரூ. 26,742 ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் நாடு சர்க்காரின் 1959–60 கணக்குகளிலிருந்து இந்தத் தண்டச் செலவு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1961-ம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் இதன் விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

கிராம, அபிவிருத்தி, ஸ்தல ஸ்தாபன நிர்வாக இலாகா கட்டிடத்தை வாங்குவதற்கு முன் சரியாகப் பரிசோதனை நடத்தத் தவறியதால் இந்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

1950ல்–கட்டிடம் வாங்கப்பட்டது

மகளிர் நல இலாகாவுக்காக தமிழ் நாடு சர்க்கார் 1950-ம் வருடம் இராணுவக் கட்டிடம் ஒன்றை வாங்கினார்கள். கிரயம் ரூ. 18,846. பழுது பார்க்கவும், மற்றும் அபிவிருத்தி ஏற்பாடுகளுக்காகவும் ரூ. 81,000 தேவைப்படும் என்று 1953 ஜனவரியில் கண்டுபிடிக்கப்பட்டது.

பிறகு 1955-ல் பழுது பார்ப்பதினால் எவ்விதப் புண்ணியமுமில்லை என்று முடிவு செய்யப்பட்டது. அதாவது கட்டிடத்தைப் பழுது பார்க்கவே முடியாத அளவுக்கு அது மோசமான நிலையிலிருப்பதாகத் தெரியவந்தது.

1957 மார்ச் மாதம் கட்டிடத்தை விற்க சர்க்கார் அங்கிகாரம் அளித்தது.

1960 பிப்ரவரி மாதம் ரூ. 690-க்குக் கட்டிடம் ஏலத்தில் விற்கப்பட்டது.

ஏல விற்பனை சம்பந்தமாக ஏற்பட்ட விளம்பரச் செலவு ரூ.606.

இந்தக் கட்டிடம் சம்பந்தமாக ஏற்பட்ட மொத்த செலவு ரூ. 27, 432. இதில் 1950 டிசம்பர் முதல் ஏலம் விடும் வரை காவலாளிக்குக் கொடுத்த சம்பளம் ரூ. 7980. ஆக நிகர நஷ்டம் ரூ. 26, 742.

குரங்குகளுடன் 15 வருடங்கள் போர் புரிந்தும் படுதோல்வி !

ஜப்பானியத் தீவு மக்களின் சோகக் கதை

இராணுவத்திலே குரங்குப் படை என்பதாக ஒன்றுண்டு. மறைந்திருந்து தாக்கி, எதிரிகளுக்குப் பெரும் சேதம் விளைத்துவிட்டு தப்பிச் செல்லும் தந்திரப்போர் முறையில் திறமை மிக்கது இந்த குரங்குப் படை என்பர் இந்த குரங்குப் போர் முறையை குரங்குகளே மனிதர் மீது நடத்தி ஆறறிவு தந்திரோபாயங்களில் சிறந்தவரெனப்பட்ட மனிதர்களைப் படுதோல்வி அடையச்செய்த சம்பவம் ஜப்பான் தீவொன்றில் நடந்துள்ளது. இந்தப் போர் 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடக்கிறது. இறுதியில் இப்போது மனிதர்கள் தங்களுடைய படுதோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

தென்னக யூஷூ தீவில் சுமார் 500 குரங்குகள் ஒன்று சேர்ந்து உணவு தேடும்படை அமைத்துக் கொண்டுள்ளன. காட்டை அடுத்த கிராமங்களில் பயிரிட்டுள்ள சர்க்கரை வள்ளிக் கிழங்குகளைப் பறித்துக் கொண்டு செல்வதில், தீயணைக்கும் படை முறையைக் கைக் கொள்கின்றன. தீயை அணைக்கத் தீயணைக்கும் படையினர் தீவிபத்து இடத்திலிருந்து தண்ணீர் உள்ள இடம்வரை வரிசையாக நின்று வாளிகளில் தண்ணீரை மாற்றி வாங்கித் தீயணைப்பர். இதேமுறையை இந்தக் குரங்குப் படை வள்ளிக்கிழங்குகளைக் களவாடிச் செல்வதில் கையாள்கின்றன. தாங்கள் வசிக்கும் காட்டிலிருந்து வள்ளிக்கிழங்குத் தோட்டம் வரை வரிசையாக நின்றுகொள்ளும். தோட்டத்தை அடைந்த குரங்குகள் கிழங்குகளைத் தோண்டி எடுத்து வரிசையில் அடுத்து நிற்கும் குரங்கிடம் தரும். அடுத்து ஒவ்வொரு குரங்கின் கைகளுக்கு மாறி இறுதியில்

மலைக் காட்டில் நிற்கும் குரங்கின் கையில் போய்ச் சேரும். அங்கு வள்ளிக்கிழங்குகள் சேர்த்து வைக்கப்பட்டுப் பின்னர் எல்லாக் குரங்குகளும் திரும்பி வந்து உண்டுகளிக்கும். இவ்விதம் கைமாற்றுவதும் அதிக விரைவாக நடக்கும்.

இந்த சமயத்தில் சில குரங்குகள் மரத்தின்மேல் உட்கார்ந்து வேவு பார்க்கும். கிராமத்தார்கள் ஆயுதங்களுடன் வரக்கண்டதும் சமிக்கை கூச்சலிட்டு எச்சரிக்கும். உடனே குரங்குப் படைவிரைந்து ஓடித் தப்பித்துக் கொள்ளும். குரங்குகள் பாது காப்புச் சட்டம் அமுலிலிருப்பதாகவும், குரங்குகள் அதிக-தந்திரத்துடன் நடந்து கொள்வதாலும் அவற்றை ஒழிக்க வியலவில்லை என்று கிராமத்தார் முறையிடுகின்றனர்.

துவக்கக் கட்டத்தில் நாய்களை ஏவிக் குரங்குகளை விரட்டினர். சிறிது காலத்துக்குப் பிறகு குரங்குகளிடம் நாய்கள் மிரட்டல் பலிக்கவில்லை. நாய்கள் குலைப்பதற்கும் பாய்வதற்கும் பயப்படவில்லை. நாய்கள் மீது தாக்கித் தப்பி ஓடும் குரங்குப் போர் முறையைக் குரங்குகள் கையாண்டன. இதனால் நாய்கள் பதுங்க வேண்டியதாகி விட்டது. குரங்குகள் முன்போல் "கிழங்குப் பறிப்பதில்" தனி யாதிக்கம் கொண்டன. இதன் பிறகு கிராமத்தார் கண்ணி வைத்துக் குரங்குகளைப் பிடிக்க முயற்சித்தனர். குரங்குகளோ இந்த சதியை ஆராய்ந்தறிந்து கொண்டு இந்தக் கூண்டுகளில் அகப்படாது தப்பித்துக் கொண்டன. பின்னர் பலகாரங்களில் விஷம் கலந்து தோட்டங்களில் போட்டு வைத்தனர். விஷ உணவு என்பதைக் குரங்குகள் கண்டு கொண்டு அந்தப் பலகாரங்களைத் தீண்டவேயில்லை. எனவே கிராமத்தார் இப்போது செய்வதையறியாது தவிக்கின்றனர்.

துண்டான காதை உயிருடன் காப்பாற்ற நூதன வழி

கழுத்து எலும்புக்குக்கீழ் புதைத்து வைக்கப்பட்டது

வாரன்சல் வாஷிங்டன் என்பவருடைய ஒரு காது அவருடைய கழுத்துப் பட்டை எலும்புக்குக் கீழே புதைக்கப்பட்டிருக்கிறது.

காதின் தசை உறுப்புகள் உயிரிழந்து விடாதவாறு பாதுகாக்க இப்படி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய இடத்தில் ஒட்ட வைக்கும் வரை அது புதைத்தே வைக்கப்பட்டிருக்கும். டாக்டர்கள் இந்த யுக்தியைக் கையாண்டுள்ளனர்.

வாரன்சல் வாஷிங்டன் 37 வயதினர். சில புலன்கள் உண்டு. இவருடைய சில புலன்களை 28 வயது மிட்ச்சல் என்பவர் மேற்பார்த்து வந்தார்.

ஒரு நாள் இருவருக்கும் இடையே சண்டை வந்து விட்டது. மிட்ச்சல் வாஷிங்டனு டையகாதைத் துண்டாக அறுத்து விட்டார்.

உடனே வாஷிங்டன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். காதும் எடுத்துச் செல்லப்பட்டது.

காதின் உறுப்புகள் உயிரிழந்து விடாதிருக்க டாக்டர்கள் அந்தக் காதை கழுத்துப் பட்டை எலும்புக்குக் கீழே புதைத்து வைத்தனர்.

வெட்டுப்பட்ட இடத்தில் புண் ஆறிய உடன் அறுபட்ட காது ஒட்ட வைக்கப்படும். அதுவரை அது புதைக்கப்பட்டிருக்கும்.

செப்டம்பர் 11–ந் தேதிக்குள் காது ஒட்டப்படும் என்று டாக்டர் தெரிவித்தார்.

அறிவைப் புகட்டும் ஆங்கிலம் தேசிய மொழியாக இருப்பது அவசியம்

அந்நிய மொழியாகக் கருதினால்,கேடு நமக்குதான் : சாவன் அறிவித்தல்

நம் நாட்டில் ஆங்கிலம் ஒரு தேசிய மொழியாக இருக்கவேண்டும். விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிலும் அறிவைப் புகட்டும் மொழி அது என்று மாராஷ்டிர முதன் மந்திரி திரு. ஒய். பி. சாவான் அண்மையில் இங்கு கூறினார்.

நாகபுரி ரோட்டரி கிளப்பில் உரையாற்றிய அவர், “ஆங்கிலத்தை ஒரு அந்நிய மொழியாகக் கருதினால், கேடுதான் வந்து சூழும். நாம் இந்தியை வளர்ச்சியடையச் செய்யலாம். ஆனால் அதற்காக நாம் ஆங்கிலத்தைக் கைவிட முடியாது” என்று குறிப்பிட்டார்.

‘தேசிய ஒருமைப்பாடு’ பற்றிப் பேசிய முதன் மந்திரி, “தேசிய ஒருமைப்பாடு ஐக்கியத்தை நிலைநாட்ட ஏதாவது ஒரு பொதுமொழி அவசியமே. பல்வேறு மொழி பேசும் மக்களிடையே பொதுவான இணைப்புச் சாதனம் இல்லை என்றால், நாம் ஒரு தேசம் என்ற பலத்தை இழந்து விடுவோம். தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஒரு கல்வி முக்கியமான கருவியாகும். ஆகையால் ஒரு பொது மொழியை உருவாக்குவது அவசியம். நமது அரசியல் சட்டம் இந்தியைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொண்டு, ஆங்கிலத்திற்குப் பதில் அதன் ஸ்தானத்தில் வைக்க வேண்டும் எனக் கூறி இருக்கிறது. ஆனால் அவ்வாறு‘ ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி’ என்ற ஏற்பாட்டை நான் விரும்பவில்லை. ஆங்கிலமும் இந்நாட்டின் ஒரு பொது மொழியாக இருக்கவேண்டும்” என்று வலியுறுத்தினர்.

★ கல்விச் செய்திகள் ★

திறமை மிகுந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் தரத் திட்டம்

இந்திய அரசு அங்கீகாரம்

யூனியன் கல்வி மந்திராலயம் வகுத்த தேசிய உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு இந்திய அரசாங்கம் தனது அங்கீகாரத்தை அளித்திருக்கிறது.

மிகுந்த திறமைசாலி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்காக இத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டப்படி 1961-62கல்வியாண்டு தொடங்கி 5 ஆண்டு காலத்துக்கு ஆண்டு தோறும் மெட்ரிக் பிற்படிப்பு மாணவர்கள் 1800 பேருக்கும் இன்டர் மீடியட் பிற்படிப்பு மாணவர்கள் 400 பேருக்கும் பட்டபிற்படிப்பு மாணவர்கள் 200 பேருக்கும் உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும்.

இத்திட்டத்துக்கு மூன்றுவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் சுமார் ரூ. 390 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ரூ. 500க்குக் குறைந்த மாத வருமானமுடைய பெற்றோர்கள் அல்லது பொறுப்பாளர்களுடைய மாணவர்களுக்கு முழு உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

ரூ. 500க்கும் ரூ. 1000க்கும் இடைப்பட்ட மாத வருமானமுடைய பெற்றோர்கள் அல்லது பொறுப்பாளர்களின் மாணவர்களுக்கு பாதி உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

மிகுந்த திறமைசாலி மாணவர்களுக்கென்று கடன் உபகாரச் சம்பள திட்டமொன்றையும் கல்வி மந்திராலயம் தயாரித்துள்ளது. இதன்படி மாணவர்கள் தங்களது படிப்பைத் தொடர்ந்து படிக்க நிதி உதவி கடனாக வழங்கப்படும். மாணவர்கள் படித்து முடித்து வேலையில் அமர்ந்த பிறகு தவணை முறையில் கடனாகப் பெற்ற தொகையைக் திருப்பித் தர வேண்டும்.

ஆசிரியத் தொழிலில் ஈடுபட ஊக்கமளிக்கும் பொருட்டு ஆசிரியத் தொழிலில் பயிற்சி பெறும் மாணவர்கள் விஷயத்தில் பணம் திருப்பித் தரப்படும் போது ஒவ்வொரு வருஷமும் கடன் தொகையில் 10 சதவிகிதம் கழிவு (ரிபேட்) தரப்படும்.

ஆனால் இந்தக் கழிவு பிரஸ்தாப கடன்தொகை பெற்ற மாணவர் ஆசிரியர் தொழிலில் அமர்ந்திருக்கவேண்டும். அவர் வேலையில் அமர்ந்த பிறகு ஆசிரியராகப் பணியாற்றும் ஒவ்வொரு ஆண்டுக்கும் திருப்பித்தர வேண்டிய கடன் தொகையில் 10 சதவிகிதம் கழிவு செய்யப்படும்.

மாதம் ரூ. 1000க்கு மேல் வருமானமுடைய பெற்றோர் களின் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் பெறும் தகுதியில்லை.

பல்கலைக் கழகமோ அல்லது போர்டோ நடத்திய வருடாந்தி ரத் தேர்வில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை அடிப்படை யாகக் கொண்டு ஒவ்வொரு மா நிலத்திலும் உபகாரச் சம்பளங் கள் வழங்கப்படும்.

திட்ட நடைமுறையைப் பற்றி யும் அவசியமாகச் செய்யப்பட வேண்டியவை என்று கருதப் படும் யோசனைகளையும் தெரிவிக்க தேசிய ஆலோசனைக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட விருக் கிறது. நாளாவட்டத்தில் ஏற் கனவே அமுலிலிருந்து வரும் பல்வேறு உபகாரச் சம்பளத் திட் டங்களுடன் இந்த தேசிய உப காரச் சம்பளத் திட்டம் இணைக் கப்படும்.

ஆசிரியை-மாணவிகளுக்கு விசேஷ உதவிகள்

பெண்கள் கல்வி வளர்ச்சி ஏற்பாடுகளையும் மந்திரி எடுத்துக் கூறினார்.

ஆசிரியைகளுக்கும் மாணவி களுக்கும் ஊக்கமளிக்க ஒரு திட் டம் அமுலாக்கப்படுகிறது. அதா வது கிராமங்களில் ஆசிரியை களுக்கு க்குடியிருக்க வீடும் அல வன்சுகளும் தரப்படுகின்றன.

பாடப் புத்தகங்களைத் திருத்தி அமைத்தல்

விரைவில்மாநாடு நடக்கும் கல்வித்துறையில் எல்லா மட் டங்களிலும் பாடப் புத்தகங்களை திருத்தி அமைத்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க ஒரு மாநாட்டை சில மாதங்களுக்குள் நடத்த மத் திய கல்வி அமைச்சு உத்தேசித் துள்ளது. பாட புத்தகங்கள். விலைகுறைப்புக்கான நடவடிக்கை களும் எடுக்கப்படுகின்றனர்.

மத்திய கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீ மாலி அண்மையில் நடந்த கல்வி சம்பந்தமான பார்லிமெண்ட் அங் கத்தினர்கள் ஆலோசனைக் குழு வின் கூட்டத்தில் மேற்கண்ட செய்தியை அறிவித்தார்.

வெளிநாட்டு பாடப் புத்தகங் களும் மற்ற வகை நூல்களும் குறைந்த செலவில் வெளியிடு வதை ஊக்கப்படுத்த கல்வி அமைச்சகம் இப்போது மேற் கொண்டுள்ள நடவடிக்கைகளை யும் மந்திரி சுருக்கமாக எடுத் துத் கூறினார்.

இவ்விதம் மறுபதிப்புப் புத்த கங்களின் விலையை, அசல் விலை யில் மூன்றில் ஒருபகுதி விலைக்கு இப்போது விற்கப்படுகிறது. இதை நான்கில் ஒரு பகுதி விலைக்கு விற்குமாறு செய்ய முயற்சி மேற்கொண்டிருப்பதாக வும் கூறினார்.

அடிப்படை விஞ்ஞானம், பொறி இயல், மருத்துவம், விவ சாயம், மனித இயல் வரலாறு, கால்நடை மருத்துவம், தொழில் இயல் ஆகியவற்றில் உபயோகிக் கத்தகுந்த தலைப்புகள் பட்டிய லும் தயாரித்து முடித்து விட்ட தாகவும் மந்திரி அறிவித்தார்.

இறை வாங்கும் முறை

சங்ககாலத் தமிழகத்தை ஆண்டுவந்த மிகச் சிறந்த அரசர்களுள் பாண்டியன் அறிவுடைநம்பி ஒருவனாவான். பாண்டிய மண்டலம் முழுவதும் அவன் ஆளுகையின் கீழ்க் கிடந்தது. அவன் அறிவும் அழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்றிருந்தான். அவன் மிக்க அறிவுடையவனாக இருந்த காரணத்தால் 'அறிவுடை' என்ற அடைமொழியும், மிக்க அழகுடையவனாக இருந்த காரணத்தால் 'நம்பி' என்ற பெயரும் அவனுக்கு இட்டு வழங்கப்பட்டன. அவன் தீந்தமிழ்ச் செய்யுள் இயற்றும் புலமை மிக்கவனாகவும் திகழ்ந்தான். அவன் பாண்டிய மரபினைச் சார்ந்த அரசர் குடியில் தோன்றிய செம்மலாக இருந்த காரணத்தால், ஆண்மைத் திறத்திலும் சிறந்து விளங்கினான். இத்துணைச் சிறப்புகளோடு பொலிவுற்று விளங்கிய அறிவுடைநம்பியின் பெயரும் புகழும் தமிழகமெங்கணும் ஒளி வீசி நின்றன என்பதில் வியப்பொன்றுமில்லை.

அறிவுடைநம்பி கல்வி கேள்விகளில் வல்லவனாக இருந்ததால், எப்பொழுதும் தமிழ்ப் புலவர் குழாம் புடைசூழ இருப்பதைப் பெரிதும் விரும்பி வாழ்ந்துவந்தான். அறிவுடைநம்பியால் போற்றப்படக்கூடியவராகவும், அறிவுடை நம்பிக்கு அறிவுரை கூறக்கூடியவராகவும் இருந்த ஒரு சில புலவர்களிலே தலை சிறந்து விளங்கியவர் **பிசிராந்தையார்** ஆவார். அவர் பாண்டியநாட்டைச் சேர்ந்த பிசிர் என்ற ஊரில் வாழ்ந்த பெரும்புலவராவார். அவர் நில புலங்களையும், ஏவலாட்களையும் உடைய ஒரு பெரும் பண்ணையாராகவும் இருந்துவந்தார். அவர் பெரும்பாலும் பிசிர் என்ற ஊரிலேயே வாழ்ந்துவந்தார். எனினும் ஓய்வும் ஒழிவும் ஏற்படும்போது, மதுரைமாநகர் சென்று அரசனையும், ஏனைய தமிழ்ப்புலவர்களையும் கண்டு அளவளாவி வருவது வழக்கம்.

அறிவுடைநம்பி அறிவிற் சிறந்தவனாக இருந்தபோதிலும், ஒழுக்கத்திலே நெறி தவறியவனாய்க் காட்சியளித்தான். அவன் காதல் மயக்கத்திற்கு அடிமையாகும் பண்புடையவனாகத் திகழ்ந்த காரணத்தாலும், அவனது செல்வம், செல்வாக்கு, அழகு கண்டு அவனிடம் பல பெண்களும் காதல் கொண்ட காரணத்தாலும் அவனுக்குக் காதற்கிழத்திகள் பலர் நாளடைவில் ஏற்படலாயினர். அவன் அவர்கள் எல்லோரையும் தனித்தனி மாளிகையில் வைத்துக் காப்பாற்றி, அவர்களுக்குப் பெரும்பொருள் வழங்கவேண்டியிருந்ததோடு, அக்காதற்கிழத்திகளின் பெருப்பெருஞ் சுற்றத்தாரையும், அக்காதற்கிழத்திகளின்

விருப்பத்திற்கிணங்க அச்சுற்றத் தார்க்கு வேண்டும் பொருள் வழங்கிக் காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்புடையவனுகவும் இருந்துவந்தான். இதனுல் அவ னுக்குப் பெருஞ்செலவு ஏற்பட் டது. அவனது செல்வமெல்லாம் நாளுக்குநாள் கரைந்தது. அடிமையரசர்கள் செலுத்தும் கப்பமும், குடிமக்கள் செலுத்தும் வரிப்பணமும் அரசனது விரிந்த செலவுக்குப் போதுமானவையாக இல்லாததால், குடிமக்களிட மிருந்து பெறும் வரித்தொகையை மேலும் மேலும் பெருக்கவேண்டி யவனுனன் அறிவுடைநம்பி.

அரசனின் அறிவு ஆற்றல் கண்டு மக்கள் எவ்வளவுக்கெவ்வ ளவு அவனைப் போற்றிப் புகழ்ந் தார்களோ, அவ்வளவுக் கவ் வளவு அவனது ஒழுக்கக்கேடான நிலைகண்டு அவனை அருவருக்கத் தலைப்பட்டார்கள். தடவைக்குத் தடவை தாம் செலுத்தும் வரித் தொகை உயர்ந்துகொண்டே போவதுகண்டு குடிமக்கள் மிகவும் துயருற்றனர். நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் பெரும் பகுதியை அரசனுக்குக் கொடுத் துவிட்டுச் சிறு பகுதியைத் தாம் வைத்துக்கொண்டு வாழவேண்டும் என்ற நெருக்கடி நிலை ஏற்பட்ட போது, குடிமக்கள் வாழும் வகை தெரியாது எங்கணும் வருந்தத் தொடங்கினர். இந்தக் குறையை அரசன் அறிவுடைநம்பியிடம் எப்படி எடுத்துச் சொல்வது என்று அஞ்சி உழவர்பெரு மக் களும் நிலக்கிழார்களும் வாய டைத்து வாளா கிடந்தனர். நிலைமை தாங்கமுடியாததாக ஆன பொழுது உழுதுண்டுவாழும் குடிமக்கள், புலவர் பிசிராந்தை யாரை அணுகித், தம் குறையை அறிவுடைநம்பியிடம் எடுத்துச் சொல்லி, மிகுவரி வாங்கும் கொடு மையை நீக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டனர். பிசிராந்தையாரும் ஒரு பெரு நிலக்கிழாராக இருந்த காரணத் தால் வரிக்கொடுமையை நன்கு உணர்ந்திருந்தார். நீதிக்குப் பாடு படவேண்டும் என்ற நேர்மை யுள்ளமும், ஏழைக் குடிமக்களின் கண்ணீரைத் துடைக்கவேண்டும் என்ற கடமையுள்ளமும் தூண்ட, பிசிராந்தையார், மதுரை நகர் சென்று அறிவுடைநம்பியைப் பார்த்து, அவனை இடித்துரைத்து அவனுக்கு அறிவுரை கூறவேண் டும் என்று எண்ணினுர். அந்த எண்ணத்தோடு மதுரை நோக் கிச் சென்றார்.

பாண்டியன் அறிவுடை நம்பி யின் நாளோலக்க மண்டபத்தில் பிசிராந்தையார் நுழைந்தவுடன், அறிவுடைநம்பி எழுந்து புலவரை வரவேற்று, வணக்கம் செலுத்தி, தனி இருக்கையில் இருக்கச் செய்து தானும் உட்கார்ந்தான். புலவர் வாய்திறவாமல் அப்படியே வீற்றிருந்தார்.

" புலவர் பெருமானே! என் வாட்டமும்வருத்தமுமாக இருக்கி றீர்கள்?" என்று அரசன் வினு வினுன்.

“எல்லாம் உன்னால் ஏற்பட்ட விளைவுதான்!” என்று புலவர் சற்றுக் கடுகடுத்த முகத்தோற்றத்தோடு கூறினார்.

உடனே அரசன் திடுக்கிட்டுப் போய் “யான் செய்த பிழை என்ன?” என்று அச்சங்கலந்த குரலில் கேட்டான்.

“நீ செய்யவேண்டியதெல்லாம் செய்துவிட்டு என்ன பிழை செய்தேன் என்று கேட்கிறாய்? இனி நீ செய்யக்கூடிய பெரும் பிழை என்ன இருக்கிறது?” என்று புலவர் சினம் பொங்கக் கேட்டார்.

அரசன் நடுநடுங்கிப்போய் இருந்த இடத்தை விட்டு எழுந்து புலவரை நோக்கி வணங்கி நின்றான், “பிழை ஏதேனும் இருந்தால் மன்னிக்கவேண்டும்” என்றான்.

“நீயோ ஒழுக்க நெறியினின்றும் தவறினாய்! கடமை நெறியை மீறினாய்! உன்னுடைய உயர்ந்த அறிவு, ஒழுக்க மேம்பாட்டைக் காப்பாற்றிக்கொள்ளவும், கடமையுணர்ச்சியை நிலைநாட்டிக்கொள்ளவும் பயன்படவில்லையே!” என்று புலவர் சுட்டிக்காட்டினார்.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தபோதிலும், “பெருமைக்குரிய பெரியோரே! தாங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லையே!” என்று அரசன் பணிந்து கேட்டான்.

“உன்னை இடித்துரைப்பார் யாரும் இங்கு இல்லாததால் உனக்கு எதுவும் புரியாதுதான்!” என்று புலவர் மறுமொழி பகர்ந்தார்.

“புலவர் பெருமானே! எனக்குப் புரியும்படி தாங்கள்தான் அறிவுறுத்த வேண்டும்” என்று அரசன் தாழ்மையாய்க் கேட்டான்.

“நீ காதற்கிழத்திகளின் காம வலையில் சிக்கிச் சீரழிந்து கிடப்பதையும், நீ நாள்தோறும் அக் காதற்கிழத்திகளின் தரம் தெரியாத ஆரவாரம்மிக்க சுற்றத்தார்களின் சொற்களைக் கேட்டுக், குடிமக்களின் அன்பு கெடும்படி, மிகவாக இறை (வரிப்பணம்) வாங்கும் நெறியற்ற முறையையுந்தான் குறிப்பிடுகிறேன்” என்று புலவர் கூறினார்.

புலவரால் இடித்துக்காட்ட வேண்டிய நிலைக்குத் தான் வந்து விட்டோமே என்பதை எண்ணி அரசன் நாணப்பட்டுச் “சான்றோயே! என் பிழையெல்லாம் பொறுக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டான்.

“நான் பொறுப்பது அல்ல முக்கியம்; நீ திருந்த வேண்டும் என்பதுதான் முக்கியம்” என்று பிசிராந்தையார் கூறினார்.

“தாங்கள் சொல்லும் அறிவுரையின்படி இனி நடக்கிறேன்!” என்று கூறிக்கொண்டே அரசன் புலவரின் காலடியில் வீழ்ந்தான்.

பிசிராந்தையார் சட்டென்று எழுந்து அரசனைத் தூக்கி நிறுத்தி "முற்றிக் காய்ந்த நெல்லை அறுவடை செய்து காப்பாற்றி வைத்துக்கொண்டு, வாயளவு கொண்ட கவளம் கவளமாக அதனை யானைக்குக் கொடுத்துக்கொண்டுவந்தால், ஒரு மாவுக்குக் குறைந்த நிலத்தில் விளைந்த குறைந்த அளவு நெல்லாக அது இருந்தபோதிலும், அது யானைக்குப் பல நாட்களுக்கு உதவக்கூடிய தீனியாக இருந்துவரும். ஆனால், யானை தானே வயலில் புகுந்து உணவு உண்ணத் தொடங்கினால், அந்த வயல் நூறு வேலி நிலப்பரப்புடையதாக இருந்தாலும் யானையின் வாயில் புகும் நெல்மணிகளை விட, யானையின் காலில் பட்டுப் பாழ்படும் நெல்மணிகளின் அளவு ஏராளமானதாக இருக்கும் அல்லவா?" என்று புலவர் அரசனை நோக்கிக் கேட்டார்.

"ஆமாம்!" என்றான் அரசன்.

புலவர் மேலும் கூறும்போது "அதுபோல, அறிவுடை வேந்தனாக இருக்கும் ஒருவன் வரி வாங்கவேண்டிய அரசு முறைப்படி வாங்கினால், அந்த முறை அவனுக்கு மிகுந்த பொருளை ஈட்டித் தருவதோடு, அவ்வரசனது நாட்டையும் தழைக்கச் செய்யும்; ஆனால் அப்படிக்கில்லாமல் குடிமக்களின் அன்பு கெடும்படியாக வரி வாங்க முற்பட்டால் யானை புகுந்த வயல்போல குடிமக்களின் அமைதியான வாழ்வு சீர்குலையும்; யானையின் காலால் நெல்மணிகள் கெடுவதைப்போல, அரசனது கொடுமையால் குடிமக்களின் வரி கொடுக்கும் அன்பு நிலை கெடும்; யானை எப்படித் தான் நெல்மணி உண்ணமுடியாமற் போகிறதோ, அதுபோல நுகரமுடியாமற்போவான்; நெல் வயல் எப்படிப் பாழ்பட்டுப் போகுமோ அதுபோலக் குடிமக்களும் பாழ்பட்டுப்போவர். இதனை நீ தெளிவாக உணரவேண்டும்" என்று அறிவுறுத்தினார்.

"நான் செய்த பிழையெல்லாவற்றையும் மன்னிக்கவேண்டும்! இனி ஒழுக்க நெறி தவறேன்; கடமை நெறி மீறேன்! இது உறுதி!" என்று அரசன் அறிவுடைநம்பி கூறப் பிசிராந்தையார் பெருமகிழ்வுற்றுத் தம்மூர் நோக்கித் திரும்பினார்.

பெரும்புலவர் **பிசிராந்தையார்** புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ள உட்கருத்தைக் கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமே மேலே காணப்படுவதாகும்.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்(கு) உணினே
வாய்புகு அதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே

கோடி யாத்து நாடு பெரிது நந்தும் ;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

[புறநானூறு—184

[**பொழிப்புரை :** காய்ந்து முற்றிய நெல்லை அறுத்துக் கவளம் கவளமாகக் கொண்டால், ஒரு மாநிலத்துக்கும் குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லாக இருந்தாலும், அது யானைக்குப் பலநாட்களுக்குத் தீனியாகவரும்; நூறுவேலி நிலமாக இருந்தாலும், யானை தானே புகுந்து உண்ணத் தொடங்கினால். யானையின் வாய்க்குள் புகும் நெல்லைக்காட்டிலும், யானையின் கால் மிகுதியான அளவு நெல்லைக் கெடுத்துப்போடும். அறிவுடைய அரசன் வரிவாங்கும் அரசுமுறைப் படி வரியைக் கொண்டால், அந்த முறை மிகுந்த பொருளை ஈட்டித் தருவதோடு மட்டுமல்லாமல், நாட்டையும் பெருமளவுக்குத் தழைக் கச்செய்யும்; காதற்கிழத்திகளுக்கு உரிமையுடையவனாகி, நாள் தோறும் தரம் அறியாத ஆரவாரம் மிக்க சுற்றத்தார்களின் தீயமொழி கேட்டு, மக்களின் அன்புகெட வாங்கும் வரிப்பணத்தை அரசன் விரும்புவானேயானால் அந்த முறையில்; யானைபுகுந்த வயல்போல, அவன் தானும் செல்வத்தின் பயனை நுகராதவனாக ஆவான்; குடிமக் களும் கெட்டுப்போவர்.

கவளம் - உணவுத்திரள்; மா - ஒருமா, ஒருவேலி நிலத்தில் இருபதில் ஒருபங்கு ; செறு—வயல் ; நெறி - அரசுமுறை ; கோடி - மிகுந்தபொருள் ; யாத்து – ஈட்டிக்கொடுத்து ; நந்தும்- தழைக்கும்; மெல்லியல் கிழவன் – பெண்வழிச் சேர்ந்தவன் ; வைகலும் — நாள் தோறும் ; வரிசை - தரம் ; கல் — ஆரவாரம் ; பரிவு - அன்பு ; தப- கெட; பிண்டம்-பொருள்தொகுதி, குவியல் ; நச்சின்—விரும்பின் ; புலம்—நிலம்]

பண்டைத் தமிழகத்தில் அறிவு சான்ற தமிழ்ப் பெரும்புலவர்கள் எவ்வளவு செல்வாக்குப் படைத் திருந்தனர் என்பதையும், நாடா ளும் அரசன் தவறிய வழி, சிறி தும் அச்சங்கொள்ளாமல் அவனை எவ்வாறெல்லாம் இடித்துரைத்து அறிவு கொளுத்தினர் என்பதை யும், நாட்டிற்கான நற்பணிபுரிவ திலே அவர்கள் எவ்வளவு தணியா ஆர்வங்கொண்டிருந்த னர் என்பதையும் இச்செய்யு ளின் மூலம் இனிது அறிந்து கொள்ளலாம்.

பிசிராந்தையார், வேறோர் புறநானூற்றுப் பாடலில், தமக்கு ஏவலாளர்கள் இருந்தனர் என்று குறிப்பிடுவதாலும், அரசன் இறை (நிலவரி) வாங்கவேண்டிய தன் முறையை வற்புறுத்திக் கூறுவதாலும், மிக்க வரி வாங்குவதால் ஏற்படும் கொடுமையைச் சுட்டிக்காட்டுவதாலும் அவர் ஒரு பெருநிலக்கிழாராக வாழ்ந்தார் என்று கொள்ளுவதற்கு இடமிருக்கிறது. யானைக்குக் கவளம் கவளமாகத் தீனிபோடுவதையும், யானை வயலில் புகுந்து தானே உண்ணுவதையும் அவர் உவமையாக்கி இச்செய்யுளில் கூறுவதிலிருந்து, அவர் யானை கட்டித் தீனிபோடும் அளவுக்குப் பெருநிலக்கிழாராக வாழ்ந்தார் என்று எண்ணுவது தவறாகாது.

இச்செய்யுளில் வந்துள்ள உவமைநயம் நினைந்துநினைந்து மகிழ்தற்குரியதாகும்.

புலவர் அரசனுக்கு அஞ்சாமல் அவனது குற்றத்தைச் சுட்டிக் காட்டி இடித்துரைக்கும் திறம் போற்றிப் பாராட்டுதற்குரியதாகும்.

—"மன்றம்"

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

வேளாண்மையின் வளர்ச்சிக்கு அணுவின் பணி

வேளாண்மைக்குப் பயன் படும் கதிர்வீச்சு ஐஸடோப்பு நுட்பங்களில் பயிற்சி அளிக்கும் சர்வதேச வகுப்பு 1961 மத்தியில் நெதர்லாந்தில் நடைபெற்றது. அணு விசையின் அமைதிக்காகப் பணிகள் அதிகமாகி வருகின்றன என்பதை அவ்வகுப்பு மிகவும் தெளிவு படுத்தியது.

அது எட்டு வாரப் பயிற்சி. வகுப்புக்கள் வாஜனிங்கன் என்னும் இடத்தில் நடந்தன. ஐ. நா. உணவு விவசாய சங்கமும், சர்வதேச அணு விசை நிலையமும் சேர்ந்து இதற்கு ஏற்பாடு செய்தன. இந்தியாவையும் வேறு 19 நாடுகளையும் சேர்ந்த மாணவர்கள் அங்குச் சென்று பயிற்சி பெற்றனர்.

வேளாண்மை, வன இயல் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு கதிர்வீச்சு ஐஸடோப்பு ஆராய்ச்சி நுட்பங்களைத் தெரிவிப்பதே பயிற்சி வகுப்பின் நோக்கம்.

அணு உலைகள் மலிவாக மின் விசை உற்பத்தி செய்யச் சில ஆண்டுகள் ஆகலாம். எனினும், ஐஸடோப்புகள் மக்களுக்குப் பல்லாயிரம் வழிகளில் இன்றும் பயன்படுகின்றன. அமெரிக்காவில் வேளாண்மைக்கு அவை மிகவும் பயன்பட்டு வருகின்றன.

ஐஸடோப்புகளைப் பயன்படுத்துவதால் அமெரிக்காவில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு வேளாண்மைத் துறையில் குறைந்தது 18 கோடி டாலர் மிச்சமாகும்; அவ்வாறு அடுத்த 20 ஆண்டுகள் நன்மை விளையும் என்று ஸ்டான்போர்டு ஆராய்ச்சி நிலையம் அண்மையில் செய்த ஆராய்ச்சி காட்டுகிறது.

கதிர்வீச்சு ஐஸ்டோப்புகளை மற்றவற்றோடு கலந்து, ஐஸடோப்புகளின் தன்மையை எவ்வளவு குறைத்தாலும், கதிர்வீச்சைக் கண்டுபிடித்து விடலாம்.

ஐஸடோப்புகளின் கதிர்வீச்சால் செடி கொடிகளின் இனத்தை மாற்றிப் புதிய இனங்களைத் தோற்றுவிக்கலாம்; ரஸாயன மாறுதல்கள் நிகழுமாறு செய்யலாம்; நுண்ணுயிர்களைக் கொல்லலாம்; பயிர்களுக்குக் கேடு விளைவிக்கும் பூச்சிகள் இனம் பெருக்காதவாறு செய்துவிடலாம்.

ரஸாயன உரங்களைச் செடி கொடிகள் எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதை ஐஸடோப்புகள் நுட்பமாய் அளந்து காண்கின்றன. புகையிலைச் செடிகள் பாஸ்பேட் உரங்களைப் பயன் படுத்துவதில்லை என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. முழங்கால் அளவு வளர்ந்தபின் சோள இனத்தைச் சேர்ந்த பயிர்கள் ரஸாயன

உரங்களைப் பயன்படுத்துவதில்லை என்பதையும் சோதனை செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இலைகளிலும் காம்புகளிலும் பழங்களிலும் உலோக உரங்களைப் போடுவதால் சிறந்த பயன் விளைகிறது என்பதை கதிர்வீச்சு டிரேஸர்கள் நன்கு காட்டிவிட்டன. இலைகளில் போடப்படும் பாஸ்பரஸில் மிக மிகச் சிறிய அளவே வீணாகிறது; மிக மிகப் பெரும் பகுதியைச் செடி பயன்படுத்துகிறது.

வேளாண்மையில் பயிர்களை அழிக்கும் பூச்சிகளை ஒழிக்க வேண்டும்; பயிர் நோய்களையும் மாய்க்கவேண்டும். அவ்வாறு செய்வதற்குப் பூச்சிகளின் வாழ்க்கை, இனப் பெருக்க முறை முதலியவற்றையெல்லாம் அதிகமாக அறிய ஐஸடோப்புகள் துணை செய்கின்றன.

செடிகள் பற்றி அறிந்து, நல்ல பலன் தரும் புதிய இனங்களைத் தோற்றுவிக்க ஐஸடோப்புகள் உதவியாக விளங்கியுள்ளன. புதிய இனச் செடிகள் நல்ல மண் இல்லாவிட்டாலும் செழித்து வளர்கின்றன; வறட்சி ஏற்படும் போதும் அவை வாடிப் போவதில்லை; இயந்திரங்களைக்கொண்டு அறுவடை செய்வதற்கும் அவை ஏற்றவையாக உள்ளன. பகட்டான நிறமும், உறுதியான வடிவமும் இருப்பதால் அவை எளிதாக விலையாகின்றன.

பிளாரிடா மாநிலத்திலும் தென் மாநிலங்களிலும் திருகுப் புழுக்களைக் கதிர்வீச்சின் மூலம் ஒழித்து விட்டார்கள். இது ஒரு புதுமை. திருகுப் புழுக்கள், கன்று காலிகளின் தோலில் சொறிகள் உள்ள இடங்களில் முட்டையிட்டு, புண்கள் உண்டாக்குகின்றன. அதனால் கன்று காலிகளின் பலமும் எடையும் குறையும்; அவை சாகவும் கூடும்.

திருகுப் புழுக்கள் மீது கதிர் வீச்சைச் செலுத்தி, அவற்றின் இனம் பெருக்கும் ஆற்றலை அழித்து விட்டார்கள். புழுக்களுக்கு வேறு கெடுதி ஒன்றும் ஏற்படவில்லை. இவ்வாறு கதிர் வீச்சுப் பெற்ற சுமார் 300 கோடி புழுக்களை விமானத்தில் கொண்டு போய் பிளோரிடா மாநிலத்திலுள்ள 2 லட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பில் விட்டு விட்டார்கள். அவை அங்குள்ள புழுக்களோடு கூடின. விரைவில் அந்தப் புழு இனமே மறைந்து விட்டது.

உணவுப் பொருள்கள் கெட்டுப் போவதால் அமெரிக்க மக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்புத் திட்டத்துக்குச் செலவாவதை விட அதிகமாகச் செலவு ஏற்படுகிறது. கதிர்வீச்சின் மூலமாய் உணவுப் பொருள்கள் கெடாமல் பாதுகாக்கும் முறை அண்மையில் சோதனை செய்யப் பட்டு வருகிறது. இறைச்சியி

னும் மற்ற உணவுகளிலும் உள்ள நுண்ணுயிர்களைக் கதிர்வீச்சு மாய்த்துவிடும்; உருளைக் கிழங்கும் வெங்காயமும் முளைவிட மாட்டா.

கதிர்வீச்சால் உணவுப் பொருள்கள் கெடாமல் பாது காக்கலாம் என்றும், பயிர்களை அழிக்கும் பூச்சிகளை ஒழிக்கலாம் என்றும் அணு விசைக் கமிஷன் ஐஸடோப் பிரிவுத் தலைவர் டாக்டர் பால் ஸி. ஐபர்ஸோல்ட் கருதுகிறார்.

மக்கள் தொகை விரைவாகப் பெருகிக் கொண்டு போகிறது. இன்னும் இருபது ஆண்டுகளில் இன்றுள்ள உணவைவிட மேலும் அரைப் பங்கு அதிகமாக உணவு வேண்டியதாகும். வேளாண் மைத் திறனைப் பெருக்க வேண்டு வன செய்தாக வேண்டும். ஐஸ டோப்புகள் அத்துறையில் உதவி செய்யும். இப் புதிய நுட்பங்க ளால் உலகப் பொருளாதாரம் ஓங்கவும், மக்கள் நலம் செழிக்க வும் வழி பிறக்கும்.

அறிவுக்கு உணவு

இறந்துபோன காலத்தின் செத்துப்போன கொள்கைகளை இளமைப் பருவத்தின் மீது படியவைப்பதைப் போன்ற கொடுமை யான செய்கை உலகத்திலேயே வேறு கிடையாது. —**ஷெல்லி**

பிறக்கிறபோது நம்மிடத்தில் என்னென்ன இல்லையோ, மனித னான பிறகு நமக்கு என்னென்ன தேவையோ, அவை எல்லாவற்றை யும் கல்வியானது நமக்கு அளிக்கிறது. ஆகையால் தான் கல்வி மனிதனுக்கு மிக அவசியமானது என்று நான் கூறுகிறேன்.—**ரூசோ**

விஞ்ஞானம் குழைத்துக் கரைக்கப்பட்ட வண்ணக்கிண்ணம். அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம்; கோரமான உருவம் எழுதப்பட்டால் குற்றம் வண்ணக் கிண்ணத் தின்மீதா ? அல்லது எழுதும் ஓவியன் மீதா ? —**அண்ணுதுரை**

நோய் பிடித்து இறப்பவர்களைவிட அச்சத்தால் பீடிக்கப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கை ஏராளம். ஆகவே தான் கூறுகிறேன். யாரும் எதற்கும் அஞ்சாதீர்கள்; விவேகம் நிறைந்த வீரர்களாக விளங்குங்கள்.
—**காந்தியடிகள்**

சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது. உண்மையோ குருட்டு நம்பிக்கைகளை எல்லாம் குழிதோண்டிப் புதைத்துவிடுகிறது. —**இங்கர்சால்**

அமெரிக்க நாட்டுச் சட்டமன்றம்

வாஷிங்டன் — அமெரிக்காவின் தலைமைச் சட்ட மன்றத்தின் பெயர் "காங்கிரஸ்". அது பிரதிநிதிகள் சபை, செனட் சபை என்னும் இரண்டு பிரிவுகள் கொண்டது. இரு சபைகளின் நடைமுறைகளையும் காணச் செல்வோருக்குச் சில சமயங்களில் ஏமாற்றம் விளையும்.

ஆரவாரமான சட்ட மன்றச் சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் போகலாம். அங்குச் சட்ட மன்ற உறுப்பினர் சிறு சிறு குழுக்களாகக் கூடிப் பேசுவதைக் காணலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருப்பதையும், தங்கள் அறைகளில் அமர்ந்து பத்திரிகைகள் படிப்பதையும் காணலாம். இங்கிலையில் சட்டம் செய்யும் பணி எவ்வாறு நடைபெறுகிறது என்று அங்கு போவோர் வியப்பெய்தக் கூடும்.

சட்ட மன்ற வேலை, குழுக்கள் மூலம் நடைபெறுகிறது. சட்ட மன்றத்திற்கு அனுப்பப்படும் மசோதாக்கள் எல்லாம் முதலில் சட்ட மன்றக் குழுக்களால் ஆராயப்படுகின்றன. ஆதலால் சட்ட மன்றத்தின் வேலை குறைகிறது.

சட்ட மன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டுவரப்படும் மசோதா ஒவ்வொன்றையும் படித்து, ஆராய்ந்து, அதுபற்றி விவாதித்து வாக்களிக்க வேண்டுமாயின், நாள்தோறும் 15 மசோதாக்கள் பற்றி இவ்வாறு வாக்களிக்க வேண்டியதாகும். ஓய்வு என்பதே ஒருவருக்கும் இல்லாமல் போகும்.

குழுக்கள் சிறப்புப் பணி செய்கின்றன. மசோதாக்களை ஆராய்ந்து, அவற்றை அவை செப்பம் செய்கின்றன. பெரும்பாலான மசோதாக்களைக் குழுக்கள் தள்ளிவிடுகின்றன.

சென்ற ஆண்டில் 5,193 மசோதாக்கள் குழுக்களுக்கு அனுப்பப்பட்டன. அவற்றுள் 1,996 மசோதாக்கள் மட்டும் சட்ட மன்றத்துக்கு அனுப்பப்பட்டன. (அனுப்பப்பட்ட 1,996 மசோதாக்களில் 417 மட்டும் சட்டங்கள் ஆயின.) எனவே, அமெரிக்க மத்திய ஆட்சியில் சட்டம் இயற்றும் பணி குழுக்கள் மூலமாகவே நடைபெறுகிறது.

நால்வகைக் குழுக்கள்

சட்ட மன்றக் குழுக்கள் முக்கியமாக நான்கு வகைப்பட்டவை:

(1) **நிரந்தரக் குழுக்கள்:** ஒரு சட்ட மன்றக் காலம் முழுவதும் அவை நிலையான குழுக்களாக இருந்து செயலாற்றும். செனட்

சபையின் அத்தகைய குழுக்கள் பதினாறு. ஒவ்வொன்றிலும் சராசரி 15 செனட்டர்கள் உள்ளனர். பிரதிநிதிகள் சபையின் நிரந்தரக் குழுக்கள் இருபது. ஒவ்வொன்றின் சராசரி உறுப்பினர் தொகை 30. வேளாண்மை வெளி விவகாரங்கள், தொழிலாளர் துறை, பாங்கிகள், செலாவணி, இராணுவம் முதலிய குறிப்பிட்ட விஷயங்கள் பற்றி ஆராயத் தனித்தனியே நிரந்தரக் குழுக்கள் உள்ளன.

நிரந்தரக் குழுக்களில் சிலவற்றிற்கு விசேஷ அதிகாரம் உண்டு. பிரதிநிதிகள் சபையின் 'விதிகள் குழு' அதன் உறுப்பினர்களுள் பெரும்பாலோர் ஆதரிக்காத எந்த மசோதாவையும் புறக்கணித்துவிட முடியும். அவ்வாறே செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழுவும் ஆற்றல் படைத்தது. வெளிநாடுகளோடு செய்யும் உடன்படிக்கைகள் எல்லாம் செனட் சபை உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கினரால் ஒப்புக்கொள்ளப்படவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் கண்டுள்ளது. குழுவின் செல்வாக்குக்கு இது முக்கிய காரணம்.

(2) சிறப்புக் குழுக்கள்: அவை குறிப்பிட்ட ஒரு வேலை செய்ய நியமிக்கப்படும் தற்காலிகக் குழுக்கள். நிரந்தரக் குழுக்களுக்கு அவை துணையாக இருக்கின்றன. சிறப்புக் குழு தன் வேலை முடிந்ததும், மறைந்து விடும்.

வெளிநாட்டு உதவி, பண வீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், முதியோர் மருத்துவ உதவி முதலியவற்றை ஆராய இந்த ஆண்டில் சுமார் 20 சிறப்புக் குழுக்கள் நியமிக்கவேண்டுமென்று சட்டமன்றம் கருதுகிறது.

(3) கூட்டுக் குழுக்கள்: செனட் சபை, பிரதிநிதிகள் சபை ஆகிய இரண்டு சபைகளின் உறுப்பினர்களையும் கொண்ட குழுக்கள் இவை. இக் குழுக்கள் நிரந்தரக் குழுக்களாகவும் இருக்கலாம், தற்காலிகக் குழுக்களாகவும் இருக்கலாம். அணுசக்தி பற்றிய கூட்டுக் குழு, நிரந்தரக் கூட்டுக் குழுவுக்கு ஓர் உதாரணம். செனட் சபை உறுப்பினரும் பிரதிநிதி சபை உறுப்பினரும் மாறி மாறி, குழுக்களின் தலைவர்களாக இருப்பர்.

(4) மாநாட்டுக் குழுக்கள்: சட்டம் இயற்றுவதில் செனட் சபைக்கும் பிரதிநிதிகள் சபைக்கும் உள்ள வேறுபாடுகளைச் சரிப்படுத்த நியமிக்கப்படும் குழுக்கள் இவை. இவை கூட்டுக் குழுக்கள்; தற்காலிகமாகச் செயலாற்றுபவை.

நியமனம் எப்படி?

பிரதிநிதிகள் சபையையும் செனட் சபையையும் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்

தது ஒரு குழுவின் உறுப்பின ராகவாவது இருப்பர். செனட் சபை உறுப்பினர் ஒவ்வொரு வரும் சராசரி இரண்டு குழுக் களில் உறுப்பினராக இருப்பர். செனட் சபையிலுள்ள ஜனநாய கக் கட்சித் தலைவரும் குடியரசுக் கட்சித் தலைவரும் செனட் குழுக் களுக்கு அவரவர் கட்சி உறுப்பி னர்களை நியமிக்கின்றனர். பிரதி நிதிகள் சபையில் ஒவ்வொரு கட்சியும் குழுக்களுக்கு உறுப் பினரை நியமிக்க ஒரு குழுவைத் தேர்ந்தெடுக்கிறது.

நிரந்தரக் குழுக்களின் தலைவர் களும் பெரும்பான்மையான உறுப்பினர்களும் பெரும்பான் மைக் கட்சியினரால் தேர்ந்தெடுக் கப்படுகின்றனர். (இப்பொழுது ஜனநாயகக் கட்சி பெரும்பான் மைக் கட்சி.) ஒவ்வொரு சபை யிலும் உள்ள பிரதிநிதிகள் தொகைக்குத் தகுந்தவாறு குடி யரசுக்கட்சியினர் குழுக்களில் உறுப்பினராக இருப்பர். சட்ட மன்ற உறுப்பினரின் விருப்பத் தைத் தழுவியே குழுக்களுக்கு அவர்கள் நியமனம் செய்யப்படு கின்றனர்.

குழுத் தலைவர்கள் குழுவில் நெடுங்காலம் உறுப்பினர்களாக இருந்தவர்களாகவும், பெரும் பான்மைக் கட்சியினராகவும் இருப்பார்கள். குழுத் தலைவர் கள் ஆற்றல் மிக்கவர்கள். அவர் கள் ““சக்கிரவர்த்திகள்”” போன் றவர்கள் என்று அரசியல் ஆராய்ச்சியாளர் சிலர் கூறியுள் ளார்கள். தங்களுக்கு விருப்ப மில்லாத மசோதா குழுக்களில் விவாதிக்கப்படாதபடி அவர்கள் செய்து விடலாம். குழுக்கள் பரிசீலனை செய்யுமுன் அவை சட்ட மன்றத்துக்குச் செல்ல முடியாது. எனவே, குழுக்களின் தலைவர்கள் மசோதாக்கள் சட்ட மன்றத்தால் விவாதிக்கப்படாத படி தடுத்துவிடலாம்.

சட்டமன்ற உறுப்பினர் ஒரு வர் ஒரு மசோதா கொண்டுவரும் போது, அது உரிய நிரந்தரக் குழுவுக்கு அனுப்பப்படுகிறது. குழு அதுபற்றி விசாரணை நடத்துகிறது; சாதகமாகவும் பாதகமாகவும் உள்ள சாட்சி களின் வாக்குமூலங்களை அது கேட்கிறது.

அவசியமான சாட்சியங்களை யெல்லாம் கேட்டபின், குழு ““செயல் (இரகசியக்) கூட்டம்,” கூடி, மசோதாவைப் பரிசீலனை செய்கிறது. கருத்து வேற்றுமை கள் இருப்பின், குழு உறுப்பினர் அவற்றைச் சொல்கின்றனர். குழு அவசியமான மாற்றங்கள் செய்கிறது. அதன்பின் வாக் கெடுக்கப்படுகிறது. பெரும் பாலான வாக்குகள் பெற்றால், மசோதா ஒப்புக் கொள்ளப் பட்டு, சட்ட மன்றத்துக்கு அனுப்பப்படுகிறது. பெரும் பாலும் சட்டமன்றம் குழுக் களின் சிபாரிசுகளைத் தழுவியே முடிவு செய்கிறது.

பண்டைத் தமிழகத்தில் விஞ்ஞானம்

(கோவை க. இரத்தினம்)

பண்டைத் தமிழகம்! பல நலம் பெற்று, சீரும் சிறப்புமுற எழிலோடு திகழ்ந்த காலம்! விழுப்புண் ஏற்று வீரமறவர் பரந்த தம் மார்பில் போர்க்கவசம் தாங்கி வெற்றி உலா வந்த நாள்! அகமும், புறமும், பத்தும் எட்டும், ஐம்பெருங் காப்பியங்களும் தமிழன்னையின் சிறப்பைத் தரணி முழுத்தும் பரணிபாடிக் கொண்டிருந்த வேளை..........

முத்தமிழ் முழங்கும் மூவேந்தர்களும், ஒரு சில குறுநில மன்னர்களும் கொடிகட்டி ஆண்டு வந்தனர் தமிழகத்தை! வண்ண ஓவியமோ, வார்த்தெடுத்தபொற் சிலையோ என ஐயுறும் அழகுக் கன்னியரின் அருகிலிருந்து, காதல் மொழிகளை மட்டுமல்ல; போர்க் காதைகளையும் பேசி மகிழ்ந்தனர் அந்நாள், தமிழகத்து வீரர்கள்!

மனிதன் விலங்கொடு விலங்காய்—காட்டுமிராண்டியாய் உலவிய அந்நாளில், ஆட்சிக்கலை வகுத்து, மாட்சியுற ஆட்சி புரிந்து வந்தவர்கள் தமிழக வேந்தர்கள்! அந்நாளில் அரசியல் துறை மட்டுமல்ல, விஞ்ஞானமும் தமிழகத்தில் சிறப்புற ஓங்கி நின்றது! பழந்தமிழர் சிறப்பியல்புகளைக் கூறும் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி போன்ற நூல்களில், பண்டைத்தமிழர் விஞ்ஞானம் பற்றிய செய்திகளைக் கண்டு அறியமுடிகிறது!

இன்றைய விஞ்ஞான யுகத்தில் போக்கு வரத்துத்துறையில் சிறப்பிடம்பெற்று நிற்பது ஆகாய விமானம்! இந்த ஆகாயவிமானம் பற்றிப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இதனை "வான ஊர்தி" எனவும், இதனைச் செலுத்துபவனை "வலவன்" என்றும் பண்டைத் தமிழர்கள் குறிப்பிட்டனர்!

எழிலெல்லாம் ஒன்று சேர்த்துத் தன் தோகைக்குள் மறைத்து வைத்திருக்கும் மயிலின் வடிவத்தில் அமைந்திருந்த விமானத்தைப்பற்றி சீவக சிந்தாமணி கூறுகிறது. அதன் விசையை வலப்புறமாகத் திருகினால், விமானம் உயரப் பறக்கும். இடப்புறமாகத் திருகினால் மெதுவாக இறங்கித் தரையில் நிற்கும். அந்த விமானம் மேக மண்டலத்துக்கு மேலும் செல்லும் சக்தி பெற்றிருந்ததாம்!

சிந்தாமணி என்ற நூலின் தலைவனாக இருக்கும் சீவகனின் தந்தை ஒரு அரசன். எதிரிகள் அவனது நாட்டைத் தாக்கவே, கருவுற்றிருந்த தன் மனைவியைத் தன்னிடம் இருந்த விமானத்தில்

ஏற்றி, வெளியே அனுப்பிவிடுகிறான் மன்னன்! விமானத்தை இயக்கும் முறையை நன்கு கற்றிருந்த அந்த மங்கை நல்லாளும் மன்னன் பேச்சுக்கு மாறுகூறாது புறப்பட்டுவிடுகிறாள். என்றாலும் கணவனது கதி ஏதாகுமோவென நினைத்து வருந்துகிறாள். இந்நிலையில் பகைவரது வெற்றிமுரசும் அதிர்கிறது! கணவன் பகைவரால் கொல்லப் பட்டிருப்பான் என்பதை நினைத்துசித்தம்சோர்ந்தாள். விமானத்தின் விசைக் கருவியை இயக்குவதையும் விடுத்தாள். இயக்குவார் அற்ற விமானம் தன்போக்கில் சென்று, ஒரு மயானத்தில் விழுந்து நொறுங்கியது. மயக்க முற்றுக் கிடந்த அந்த மங்கை நல்லாள், அங்கு அழகிய ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அதுவே சீவகன் என்று கூறுகிறது சிந்தாமணி!

அதைப்போலவே வானவெளியில் ஒரு பெரிய கோட்டையைப் போலப்பறந்து செல்லும் விமானமும் அந்நாளில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது! அதன் பெயர், "தூங்கெயில்" என்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தூங்கெயில் என்பதற்கு நேரடியான ஆங்கிலச் சொல், "Flying fortress" (பறக்கும் கோட்டை) ஆகும். இந்த ரக விமானங்கள் இரண்டாவது உலகப் போரில் அமெரிக்காவால் உபயோகிக்கப்பட்டன!

இந்தத் 'தூங்கெயில்' விமானத்தில் இருந்து தொல்லை கொடுத்த கொடிய பகைவரை வென்று வெற்றிவாகை சூடினன் ஒரு சோழ மன்னன். எதிரியின் தூங்கெயில் விமானத்தை வீழ்த்தி, வெற்றிபெற்ற அம்மன்னனை "தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்" என்று தமிழகம் போற்றிப் புகழ்ந்தது!

தமிழகத்தில் இன்று நின்று நிலவும்கோட்டைகளும், அழிந்து பட்ட கோட்டைகளும் எத்தனையோ போர்க்காதைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன! அவைகளுக்கு மட்டும் வாய் இருந்து பேசுமானால் பண்டைத் தமிழக மக்களது வீரத்தினைப் பற்றியும் செயற்கரிய செய்த தமிழக வேந்தர்களைப் பற்றியும் பெருமையாகப் பேசும்; நம்மைப் பார்த்து ஏசும்! இன்றைய இழிநிலையைச் சுட்டிக் காட்டிக் கை கொட்டிச் சிரிக்கும்!!

தமிழ்நாட்டு வரலாற்றில் சிறப்பான இடம்பெற்று நிற்பது மதுரைமாநகரம்! பழம் பெருமை மிக்கது. பாண்டிய நாட்டின் தலைநகராகத் தொன்றுதொட்டு இருந்துவந்தது! மதுரைக் கோட்டையைப் பற்றியும், கோட்டைச் சுவர்கள் மீது அமைக்கப்பட்டிருந்த நவீன இயந்திரப் பொறிகளைப்பற்றியும் 1,800 ஆண்டுகட்கு முற்பட்டது எனக் கூறும் சிலப்பதிகாரம் தமிழர் சிந்தை குளிரக் கூறுகிறது!

கப்பல் கட்டும் துறையிலும் தமிழர் மிக முன்னணியில் இருந்தனர். கடல் போக்குவரத்து முறையினை முதன் முதலில் கண்டுணர்ந்தவர்கள் தமிழர்களேயாவர். தமிழ்நாட்டு மேலைக் கடற்கரைப் பட்டினமாகிய முசிறியில் வேற்றுநாட்டுக் கப்பல்கள் பொன்னை நிறையக் கொண்டு வந்து இறக்கிவிட்டு, தமிழ்நாட்டு மிளகினை ஏற்றிச் செல்லும் என்று கூறுகிறார் ஒரு புலவர்!

"கப்பல்கள் மூலம் வந்து இறங்கிய குதிரைகளும், தரை வழியாக வந்த மிளகு மூட்டைகளும், இலங்கையிலிருந்து வந்த உணவுப் பொருட்களும், காழகத்திலிருந்து வந்த பண்டங்களும், இமயமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட பொன்னும் மணியும், குடமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சந்தனமும் அகிலும், கங்கை, காவிரி நீரால் விளைந்தனவுமான பொருள்களும் காவிரிப் பட்டினத் துறைமுகத்தில்மலையெனக்குவிந்துகிடந்தன. உலக மாந்தர் ஒருசேர வந்தாலும் கொடுக்கக் குறைபடாதனவாக நிறைந்திருந்தது" என்று கூறுகிறது பட்டினப்பாலை!

பண்டைத்தமிழர் வானாராய்ச்சித் துறையிலும் விற்பன்னராகத் திகழ்ந்தனர். பகலும் இரவும் இடைவிடாது வானத்தை நோக்கியிருந்து அங்கு நிகழும் வானவில்லும், மின்னலும், விண்மீன் வீழ்வும், கோள்நிலையும் பார்த்து மழை, பனி, வெயில் என்ற மூவகைக் காலத்தின் இயல்புகளையும் கண்டு சொல்லும் வானநூற் புலவர்கள் நிறைந்திருந்தனர். முக்காலத்தின் இயல்புகளையும் கண்ணி (கருதி) உரைக்கும் வானாராய்ச்சிப் புலவனை "கணியன்" என வழங்கினர் தமிழர்!

உலக அமைப்பையும், இதனைச் சூழ்ந்த வெளியாகிய வானத்தின் இயல்பினையும் வானத்தில் இயங்கும் ஒளிப் பொருள்களாகிய ஞாயிறு, திங்கள் இவற்றையும் ஆராய்ந்துணரும் ஆராய்ச்சியில் தமிழக மக்கள் மிகப்பழைய காலத்திலேயே ஈடுபட்டு வந்தனர். அதன் விளைவாய் அவர்கள் கண்டுணர்ந்த உண்மைகள் மிகப் பல. பூதநூல் ஆராய்ச்சிபற்றி இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு அவர்கள் கூறிய உண்மைகளிற்சில சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. மிகத்தொன்மையான, அக்காலத்தில் தமிழர் கண்ட உண்மைகளிற்பல, இன்றைய மேனாட்டார் நவீனக் கருவிகள் மூலம் கண்டு கூறும் முடிவுகளுடன் ஒத்திருக்கின்றன என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது!

ஞாயிறாகிய அனற்பிழம்பிலிருந்து தெறித்துவிழுந்த ஒரு சிறு உருண்டையே உலகம் என்றும், இந்நிலத்திலிருந்து தெறித்துச்சென்ற மற்றோர் உருண்டையே சந்திரனென்றும், ஞாயிற்றினின்றும் தெறித்து விழுந்த பூமி, அதன் கவர்ச்சி

யால் இழுக்கப்பட்டு ஞாயிற்றைச் சுற்றிவருகிற தென்றும், அவ்வாறே பூமியிலிருந்து சிதறிய மற்ருேர் உருண்டையாகிய சந்திரன், ஞாயிறையும், பூமியையும் ஒருங்கே சுற்றி வருகிறது என்றும் இக்கால ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குமேல் காற்று அறவே இயங்குவதில்லை என்பதும் இன்றைய ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு!

ஆனல் இந்த உண்மைகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் தங்கள் நுண்ணுணர்வால் கண்டுணர்ந்து வெளிப்படுத்தினர்!

ஞாயிற்றின் இயக்கமும், அதன் கவர்ச்சியும், அதனல் இழுக்கப்பட்டு இவ்வுலகம் ஞாயிற்றைச் சுற்றி வருந்தன்மையும், காற்றின் அசைவும், சென்ற காலநிலை, தற்போதைய நிலை, எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பனபற்றி நேரிற் சென்று கண்டவர்போல, விரிவாகவும் கூறினர். இது பற்றி புறம் 30–வது பாடலில் காணலாம்.

கூடலூர் கிழார் என்பார் பாடிய புறப்பாட்டிலுள்ள வான நூல் குறியீட்டுச் சொற்கள் யாவும் தனித்தமிழ்ச் சொற்களாகவே இருப்பதனைக் காணுங்கால், அக்காலத்தில் வான இயல் பற்றித் தமிழ்நூல்கள் பல இருந்திருக்கவேண்டும் என்பது நன்கு புலனுகிறது!

—"மன்றம்"

(40–ம் பக்கத் தொடர்ச்சி)

ஔவையாரின் மூதுரைப் பாட்டு மன்னனையும் மாசறக் கற்றேனையும் சீர் தூக்கிப் பார்த்துக் கற்றேனே மன்னனைவிடச் சிறப்புடையவன் என்று திட்டவட்டமாக உரைத்து விடுகிறது.

அரசனுக்கு அவன் தேசத்தில் தான் சிறப்பு உண்டு. இதற்கு ஒரே காரணம் கூறுகிறர் ஔவையார். ஆனல் அசைக்கமுடியாத, யாரும் மறுக்கமுடியாத காரணம். அந்த உண்மையை ஒப்புக்கொண்டால் அரசனைவிடப் புலவனுக்கே சிறப்புமிகுதி என்பதை நாம் ஏற்றுக்கொண்டு விடுவோம்.

சென்ற இடமெல்லாம் சிறப்பும் சீரும் தருகின்ற கல்வி உயரிய செல்வம்; அதனைப் புகழ் முட்ட ஈட்டுவது உங்கள் கடன். நீங்கள் கற்றோராகச் சிறந்து உங்களுக்கும் உங்கள் நாட்டிற்கும் பெரும் புகழைத் தேடித்தருவீர்களென்று நம்பலாமல்லவா?

(மலேயா வானெலி தமிழ்ப் பள்ளிக்கூடப் பகுதியில் ஒலி பரப்பப்பட்டது).

அதிசயம்! ஆனால் உண்மை!

விதைக்காமல் விளைந்த கழனி

விதைக்காமல் விளைந்த கழனியா? இதென்ன வேடிக்கை என்றுதானே கேட்கிறீர்கள். இது வேடிக்கையல்ல. ஆனால், லண்டனில் நடந்தது.

மூன்று சகோதரர்களுக்குச் சொந்தமான ஒரு வயலில், 9 ஏகர் நிலத்தில் 'ஓட்ஸ்' அமோகமாக விளைந்திருந்தது. ஆனால் அந்த வயலில் 'ஓட்ஸ்' விதைக்கப்படவில்லை.

எப்படி என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்லுகிறேன். சென்ற வருடத்தில் பலத்த காற்று வீசி வயலில் ஏராளமான ஓட்ஸ்தானியத்தைக் கொணர்ந்து குவித்திருந்தது. பிறகு வயலை உழுதார்கள். ஆனால், பெருமழை பிடித்ததால் ஒன்றும் செய்யமுடியாமல் போயிற்று. இதற்கிடையே விழுந்துகிடந்த தானியங்கள் காற்றினாலும், பறவையினாலும் பரவலாக முளைக்கத் தொடங்கின. விதைக்காமலே விளைந்த இந்தக் கழனியை வேடிக்கை பார்க்கச் சுற்றுப்புறத்தில் பல மைல் தொலைவிலிருந்து ஏராளமானவர்கள் வந்தனர்.

அதிக விளைச்சல்

உற்பத்தியைப் பெருக்குவதில் உலகமெங்கும் கடும்போட்டி நடை பெறுகிறது. ஆனால், உலகத்திலேயே நெல் விளைச்சல் விகிதம் அதிகமாக உள்ளது ஆஸ்திரேலியாதான் என்பது சிலர் நம்ப முடியாததாக இருக்கலாம். எனினும், செய்தி என்னவோ உண்மைதான்.

நெல் விதைக்கப்பட்ட 46,230 ஏக்கரில் 1,12,520 டன் அறுவடையாகியிருக்கிறது. அதாவது ஏகர் ஒன்றுக்கு 2·43 டன். இன்னொரு ஜில்லாவில் ஏகருக்கு 2·75 டன் கிடைத்துள்ளது. அமோகமான இந்த விளைச்சலுக்கு அடிப்படைக் காரணம் என்ன தெரியுமா?

ஆஸ்திரேலியாவில் நெல் பயிரில் பூச்சி பிடிப்பதில்லை. அடுத்தபடியாக விதைப்பது முதல் அறுவடை வரை முற்றும் இயந்திர மயம்!

சூரியன் தரும் மின் சக்தி

கதிரவனின் வெப்பத்தின் மூலம் மின்சார சக்தியை உண்டாக்கிக் கிணற்றில் தண்ணீர் இறைக்கும் மோட்டார்களை இயக்கும் கருவி ஒன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து விளக்குகள் எரிக்கலாம். இதற்காக விசேஷ இரும்புப் பெட்டியொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் சூரிய வெளிச்சம் பட்டால் அது மின்

சார சக்தியாக மாறுகிறது. சுமார் 20 அடி ஆழம் வரை உள்ள கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க இந்த மின் சக்தியைப் பயன்படுத்தலாம்.

புல் தின்னும் குழந்தைகள்

புல்லைத் தின்று குழந்தைகள் வளருகின்றன—அதுவும் ஊட்டமாக வளருகின்றன என்றால் நீங்கள் நம்பத்தான் மாட்டீர்கள். நீங்கள் நம்பவில்லை யென்பதால் விஷயம் 'உண்மை'யில்லாமற் போகுமா?

லண்டனில் ஜமைக்காவிலுள்ள குழந்தைகளுக்கு பிரிட்டனில் விளையும் ஒரு வகைப் புல் ஆகாரமாகக் கொடுக்கப்படுகிறதாம். அந்தப் புல்லிலிருந்து புரதச் சத்தை எடுத்துப் பொடியாக்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைச் சாப்பிடும் குழந்தைகள் கொழு கொழு என்று வளருகின்றனவாம் கானாவிலும் ஏற்கனவே இந்தப் 'புல்' உணவு வழங்கப்படுகிறது.

வலி போக்கும் வாயு

மாஸ்கோ நாட்டின் மருத்துவக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பெத்ரோவ்ஸ்கியும், டாக்டர் எபுனியும் அறுவை சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் வலியை அகற்றுவது பற்றிய பிரச்னை குறித்து வெகு காலமாக ஆராய்ச்சி நடத்திவந்துள்ளனர். இந்த வலி சமீபகாலம் வரையும் தவிர்க்க முடியாததாகக் கருதப்பட்டு வந்துள்ளது என்பதை நாம் அறிவோம். அறுவை சிகிச்சைக்கான சுரணை நீங்கும் மருந்தின் விளைவு மறையத் தொடங்கியதும் நைட்ரஸ் ஆக்சைட்டை அளித்தால் வியக்கத் தக்க வகையில் வலி பறந்தோடிவிடுகிறது. இதனால் தீங்கு ஏதும் விளைவதில்லையாம்.

நீந்தத் தெரியாத வாத்து

மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா என்பார்கள். அது இயல்பாகவே வரும் என்பதுதான் அதன் பொருள்.

அண்மையில் இத்தாலியில் நீந்தத் தெரியாத ஓர் ஆண் வாத்து ஒன்று அங்கு செல்லும் யாத்திரிகர்களுக்குப் பெரும் வேடிக்கைப் பொருளாக இருக்கிறது. இதற்குக் காரணம் இந்த வாத்தின் தாய் இறந்துவிட்டதாகவும், பிறகு அதை ஒரு பெட்டைக் கோழி வளர்த்ததாகவும் கூறுகிறார்கள்.

ஆனால், அங்குள்ள ஒரு குடியானவர் இதுபற்றிக் கூறியது பலரையும் திகைக்க வைத்துவிட்டது. அவர் இந்த ஆண் வாத்தை விற்பதற்கு முன்னால் ஒரு விதமான சோப்பைப் போட்டு அதைக் குளிப்பாட்டினாராம். அந்த சோப்புப் பவுடர் வாத்தின் தோல்மேல் தண்ணீர் ஒட்டாமல் இருக்கும் மெழுகு போன்ற வஸ்துவை நீக்கிவிட்டதாம்.

மந்திர டெலபோன்

மேற்கு ஜெர்மனியின் பான் பட்டணத்திலுள்ள கம்பெனி ஒன்று, புது வகை "மந்திர டெலிஃபோன்" ஒன்றை விற்பனைக்குக் கொண்டுவந்திருக்கிறது. எந்த ஊராயிருந்தாலும், எந்த இடமாயிருந்தாலும் நேரடியாக டெலிஃபோனில் 'டயல்' செய்து பேசமுடியும் என்ற நிலை மேற்கு ஜெர்மனியில் சீக்கிரமே வந்துவிடப் போகிறது என்பதால், பெரிய கம்பெனிகளுக்கும் மற்ற கம்பெனிகளுக்கும் வித்தியாசமிருக்காது. ஆனால் பெரிய கம்பெனிகளோ கால விரயத்தையும், வீண் உழைப்பையும் இன்னும் குறைத்துக்கொள்ள விரும்புகின்றன; புதிய டெலிஃபோனை வைத்துக்கொண்டு, பான் பட்டணத்தின் பெரிய கம்பெனி ஒன்று ஹாம்பர்க்கிலுள்ள தனது கிளையுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும் என்பதோடு, அந்தக் கிளையிலேயே குறிப்பாக எவருடன் வேண்டுமானாலும் அவருடைய இடத்துக்கே ஃபோன் செய்தும் பேச முடியும். இந்தமாதிரி நேரடியாக ஒரு குறிப்பிட்ட நபருடன் பேசுவதற்கென டெலிஃபோனில் ஒரு மந்திரப் பித்தான் இருக்கிறது; அதை அழுத்தினால் இணைப்பு ஏற்பட்டுவிடும். இதனால் பெரிய கம்பெனிகளின் டெலிஃபோன் எக்ஸ்சேஞ்ச் பெண்களுக்குப் பொறுப்புகுறையும்; ஏனென்றால், இந்தப் புதுவகை டெலிஃபோன் இருந்தால், எஸ்க்சேஞ்சின் உதவியில்லாமல் நேரடியாக யாருடனும் பேசமுடிகிறதே!

—"சிவாஜி"

அறிவுக்கு உணவு

அறிவாளிகளிடமிருந்து முட்டாள்கள் கற்றுக் கொள்ளும் பாடத்தைவிட முட்டாள்களிடமிருந்து அறிவாளிகள் கற்றுக் கொள்ளும் பாடமே அதிகம்.
—வால்டேர்

வாழ்க்கையின் சுகங்களையும் துக்கங்களையும் ஒரே மாதிரியாகப் பார்க்கிறவர்கள் யாரோ அவர்கள் தான் சிறந்த முறையில் கல்வி பயின்றவர்கள் என்பது என்னுடைய கருத்து.
—ரூசோ

சிறந்த இலட்சியங்களே! 'மானிட சாதியின் மாபெரும் முயற்சிகளே' வீரத் தன்மைகளே' அஞ்சாநெஞ்சர்களின் அரிய செய்கைகளே! நீங்களே என் கடவுள்கள்.
—வால்ட் விட்மன்

உலகத்தில் எவை எவை மிகச் சிறந்தனவாய் உள்ளனவோ; எவை எவை அழகியனவாய்த் திகழ்கின்றனவோ அவற்றையெல்லாம் என்றென்றும் அழியாத உயிரோவியங்களாக அமைத்துவிடும் அரிய பண்பு படைத்தது கவிதை
—ஷெல்லி

புலியரசும் கவியரசும்!

[முருகு சுப்பிரமணியன்]

படித்தவர்கள், பணக்காரர்கள், பாராளும் மன்னர்கள்–இம் மூன்று பிரிவினருக்கும் உலகில் நிலையான சிறப்புண்டு. கல்வியின் பெருமையைச் சொல்ல வேண்டுமா? கண்ணைத் திறந்துவிடுவது கல்வி. உலகின் முன்னேற்றத்திற்கு வழிவிடுவதும் கல்வியே. வையகம் நாளும் செழித்து வாழ்வதும் கல்வி பெற்ற நல்லாராலேயே. படித்தவர்களின் சிறப்பை இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம்.

கல்விச் செல்வம் ஒரு போதும் குறைவதில்லை; பிறருக்கு வழங்க வழங்க அது பெருகுகிறது; வெள்ளத்தாலோ, வெந்தணலாலோ அது அழிவதில்லை.

கல்வி மனிதனைத் திருத்துகிறது; மேம்பட்டவனுக்குகிறது. 'கற்றவன் உண்பான் பெற்றவளும் உண்பாள்' என்னும் பழமொழிக்கேற்ப, கல்வி வாழ்வுக்கு வழி செய்கிறது.

பணக்காரர்களின் சிறப்பு என்ன? உலகில் கண்கண்ட தெய்வம் பணம். பணத்திற்கு முன் மற்ற சிறப்புகள் அனைத்துமே தாழ்ந்துவிடுகின்றன. 'இல்லானை இல்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்; செல்லாது அவன் வாயிற் சொல்லும்' என்னும் பாட்டு பணத்திற்குள்ள மகிமையை அப்பட்டமாக உரைக்கிறது. 'ஏழை சொல் அம்பலம் ஏறாது' என்னும் பழமொழி தெரிந்ததே. பணத்திற்கும் பணக்காரர்களுக்கும் அன்று முதல் இன்றுவரை உலகில் பெருஞ் சிறப்பு நிலவி வருகிறது; இச்சிறப்பு என்றும் இருந்து வரும்.

இனி அரசனை எடுத்துக்கொள்வோம். அவன் நாட்டை ஆளப் பிறந்தவன். அரசனுக்கு ஆளும் உரிமை காரணமாக எல்லோரையும் ஏவல் கொள்ளும் அதிகாரம் உண்டு. அரசனின் ஆணைக்கு முன், படித்தவன், பணக்காரன் எல்லோருமே பணிய வேண்டியதுதான். நாட்டில் அவன் வைத்தது சட்டம். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் வரிகள் மன்னர்களின் தலைமைச்சிறப்பை இயம்புபவை.

ஔவை மூதாட்டி மன்னனையும் புலவனையும் சீர் தூக்கிப்பார்க்கிறார். எவருக்கு முதற் சிறப்பு அளிக்கலாமென்று சிந்திக்கிறார். சிறப்பில்மிக்கவன் மன்னனா, புலவனா என்று ஆராய்கிறார். அவர் கண்ட முடிவுதான் என்ன?

மன்னனைவிடக் கற்றோனே சிறப்பு மிக்கவன் என்று ஔவைப் பாட்டியின் புலமையுள்ளம் தீர்ப்புரைக்கிறது.

தம் முடிவுக்குக் காரணமும் சொல்கிறார் நம் தமிழ்ப்பாட்டி.

'மன்னனும் மாசறக் கற்றோனும்
சீர் தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்
புடையன்—மன்னற்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை;
கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு

ஒரு நாட்டிற்கு மன்னனே தலைவன் என்பதையோ, அந்த நாட்டில் மன்னனை மிஞ்சும் பெருமையும் சிறப்பும் வேறு எவருக்கும் இல்லையென்பதையோ மூதுரை மறுக்கவில்லை. மன்னன்தான் ஆளும் நாட்டிற்கு ஈடு இணையற்ற தலைவன். அங்கே அவனுக்குமுன் படித்தவரோ, பணக்காரரோ, மற்றும் எவருமோ செல்வாக்கோ, சிறப்போ பெறமுடியாது. முதற் சிறப்பு ஆளும் அரசனுக்குத்தான். முதல் மரியாதையும் அவனுக்கே! அவன் கட்டளைக்குப் பணிந்தே கற்றோர் முதலிய அனைவரும் நடந்தாக வேண்டும்.

ஒரு நாட்டெல்லைக்குள் பார்க்கும்போது அரசனுக்கே தலைமைச் சிறப்பு இருப்பதைக் காணுகிறோம். அங்கே புலவனுக்கும் அரசனுக்கும் அடுத்த நிலைதான்.

நாட்டெல்லை கடந்த ஒரு வற்று நாட்டில் அரசனின் நிலை என்ன? புலவனின் நிலை என்ன? அங்கே அரசன் எவ்வாறு மதிக்கப்படுவான்? கற்றோன் எவ்வாறு போற்றப்படுவான்?

அரசனின் சிறப்பெல்லாம் அவன் ஆளும் நாட்டோடு சரி, படித்தவன் சிறப்போ வேற்று நாட்டிலும் செல்லுபடியாகக் கூடியது. புலவனையும் அறிவாளியையும் பிற நாட்டவரும் விரும்பி ஏற்பர். அவர்களுக்கு மரியாதை செய்வர். ஏற்றுப் போற்றுவரென்பதே ஔவையார் சுட்டிக் காட்டுகிற உண்மை.

'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' இவ்வரியைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பாருங்கள். மிகப் பெரிய உண்மையை உள்ளடக்கியிருக்கிறது இவ்வரி. உலகம் உள்ளளவும் நிலைத்திருக்கக்கூடிய பேருண்மை இது.

அரசனுடைய ஆட்சியும் அதிகாரமும் குறிப்பிட்ட எல்லைக் கோட்டுக்குள் நின்றுவிடக் கூடியவை; பணத்தின் மதிப்புக்கூட அந்தந்த நாட்டோடு சரி. ஆனால் கல்வி அத்தகையதன்று. அதற்கு எங்கும் எவ்விடத்தும் வரவேற்புண்டு.

பழந் தமிழ்நாட்டில் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன் ஒருவன் இருந்தான். அவனைக்காண மோசிகீரனார் என்னும் புலவர் வந்தார். அவர் வந்த

போது அரசன் அரண்மனையில் இல்லை.

அங்கு சேரனுடைய முரசு வைக்கப்படுகின்ற முரசு கட்டில் காலியாக இருந்தது. புலவருக்கு வழி நடந்துவந்த களைப்பு. ஓய்வெடுக்க எண்ணிய புலவர் மோசிகீரனாருக்குக் காலியாக இருந்த கட்டில் வரவேற்புக் கூறியது. அதிலே படுத்தார் அப்படியே உறங்கியும் விட்டார்.

அரசு கட்டிலுக்கு அடுத்த சிறப்பு முரசுகட்டிலுக்கே. முரசு வைக்கப்படும் கட்டிலில் கை அல்லது கால் கூடத் தவறியும் படக்கூடாது. அப்படிப்பட்டு விட்டால் அந்தக் காலையும் கையையும் வெட்டிவிடுவர். அதுதான் தண்டனை. முரசு கட்டிலுக்கு அத்துணை உயர்ந்த இடம் தந்துவந்தனர் அக்கால மன்னர்கள்.

மோசிகீரனார் இதனை அறியாது கட்டிலில் படுத்து உறங்கிப் போனார். வெளியே சென்ற மன்னன் வந்தான். முரசு கட்டிலில் யாரோ படுத்திருப்பதைக் கண்டதும் அவன் கை, வாளை உருவியது. அருகே நெருங்கியபோதுதான் முரசுகட்டிலில் படுத்து உறங்குபவர் பெரும் புலவர் என்பதை அறிந்தான். உடனே, வாளை உறையில் போட்டான். மயில்தோகை விசிறி எடுத்து வந்து அவருக்கு வீசத் தொடங்கினான்.

விழித்தெழுந்த புலவரை அரசனின் செய்கை மெய் சிலிர்க்க வைத்தது. முரசுகட்டிலில் படுத்ததற்குத் தண்டனை சிரச்சேதம். அதனைத் தருவதற்குப் பதில் மன்னன் தனக்கு மயில்தோகை கொண்டு வீசுகிறான். 'தமிழ் கற்றதாலன்றோ தனக்கு இச்சிறப்பு' என்று பூரித்துப் போகிறார் புலவர் பெருமான் மோசிகீரனார்.

கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்னும் உண்மையை இந்நிகழ்ச்சி அருமையாகக் காட்டுகிறது.

மோசிகீரனாருடைய புலமை அவருக்கு எத்துணைச் சிறப்பைத் தேடித் தந்துவிட்டது! முரசு கட்டிலில் வேறு எவரும் படுத்திருந்தால் தலைபோயிருக்கும். ஆனால் மோசிகீரனாரின் உயிருக்கு ஆபத்து ஏதும்நேரவில்லை. சிறுதண்டனையேனும் மன்னர் தந்திருக்கலாமல்லவா? அவ்வாறும் நிகழவில்லை. அதற்கு மாறாகப் புலவர் அயர்ந்து தூங்க மன்னன் விசிறி எடுத்து வீசுகிறான். எத்துணைப் பெருமை! எத்துணைச் சிறப்பு!

கற்றோருக்கு உயிருள்ள காலத்தும் புகழ்; மறைந்த பின்னரும் புகழ்; தாம் பிறந்த நாட்டில் மட்டுமன்று, உலகமெங்குமே புகழ்.

உயர்தமிழ்ப் புலவர்களான கம்பனையும் வள்ளுவனையும் எண்ணிப் பாருங்கள். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ்கொண்ட தமிழ்நாடு' என்று பாரதி பாடி மகிழ்கிறார். வள்

ளுவனைத் தமிழ்நாடு மட்டும் எப்படி உரிமை கொண்டாட முடியும்? அவன் உலகுக்கே உரியனாகி விட்டான்.

வள்ளுவனுக்குச் சிறப்பு தமிழ் நாட்டோடு நின்றுவிடவில்லை; வையகமெல்லாம் அவன் சிறப்பு நின்று நிலவுகிறது. 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என்பது எத்துணை அரிய உண்மை!

ஆங்கிலநாட்டுப் புலவன் ஷேக்ஸ்பியரை எடுத்துக்கொள்ளுங்கள். அவனுடைய விழாவை இங்கிலாந்தில் மட்டுமா கொண்டாடுகிறார்கள்? உலகமெங்குமே ஷேக்ஸ்பியர் விழா நடைபெறுகிறது. ரஷ்யாவில்கூட அப்பெரும் புலவரின் இலக்கிய விழா கொண்டாடப்படுகிறது. கற்றோரின் சிறப்புக்கு நாட்டெல்லை இல்லை என்னும் உண்மையையே நாம் இதன் மூலம் அறிகிறோம்.

கற்றோரான விஞ்ஞானிகளின் நிலையும் இதுதான். ரயில் கண்டு பிடித்தவர்கள், மின்சாரம் கண்டவர்கள், வானொலியை உருவாக்கியவர்கள், வான ஊர்தியை இயங்க வைத்தவர்கள் இவர்கள் எல்லாரும் தாம் பிறந்தநாட்டுக்கு மட்டுமே உரியவர்களா? அவ்வாறு கூறினால் உலகம் ஒப்புமா? உலக நாடுகள் அனைத்திலும் போற்றிப் புகழும் சிறப்புக்கு உரியவர்கள் அல்லவா இவர்கள்! மன்னர்களுக்கு இல்லாத எல்லை கடந்த பெருஞ் சிறப்பு கற்றோராகிய மேதைகளுக்கு உண்டு.

அரசுரிமை பெரும்பாலும் பரம்பரை உரிமையாகும். அரசன் மகன் அரசன். பிறப்புரிமையாலேயே அரசர்களுக்கு ஆளும் வாய்ப்பு தரப்படுகிறது. அரசர்க்கு வேறு தகுதிகள் பார்க்கப் படுவதில்லை.

கற்றோர்க்கு இந்நிலை இல்லை. அவர்கள் தாம் தேடிப் பெறுகின்ற தகுதியாலேயே சிறப்புப் பெறுகின்றனர். இந்தியாவில் மருத்துவம் பயின்ற ஒருவருக்கு அவர் தகுதி காரணமாகவே வேலை தருகிறோம். மலேயாவில் புகழ் பெற்ற நூலாசிரியருக்கு அமெரிக்காவில் வரவேற்புக் கிடைக்கிறது. ஆஸ்திரேலிய மேதையைச் சிங்கப்பூர் அரசினர் வேலைக்கு அமர்த்திக்கொள்கிறார்கள். கல்வித் தகுதிக்கு எந்நாட்டிலும் மதிப்புஉண்டு என்பதற்கு இவை சான்றுகள்.

அரசரோ தாம் ஆளும் நாட்டை விட்டு வேற்று நாட்டில் தம் அதிகாரத்தைச் செலுத்த முடியாது; பிறநாட்டினர் அவர் ஆணைக்குப் பணியமாட்டார். அங்கு அவர் சாதாரண மனிதராகவே கருதப்படுவார். தனிச் சிறப்பு ஏதும் அந்நாட்டில் அவருக்கு நல்கப்படமாட்டாது.

கற்றவர்களைப் பொறுத்து இந்நிலை முற்றும் மாறுபடுகிறது. அவர்களுக்குச் செல்லும் நாடுகளில் எல்லாம் சிறப்பும் வரவேற்பும் உண்டு.

செயற்கைச் சந்திரனை வானில் பவனி வரச் செய்த சோவியத்

விஞ்ஞானிகளை உலகமே புகழ்கிறது. எல்லா நாட்டு மக்களுமே அவர்களைப் பெருமையாகப் பேசுகிறார்கள். அதுபோன்ற பெருமையும் சிறப்பும் ரஷ்யாவை ஆளும் தலைவர்களுக்கும் கிடைக்குமா? ஒருபோதும் கிடைக்காது.

கற்றோர்க்குப் பிறந்த நாட்டிலும் சிறப்பு; பிற நாடுகளிலும் சிறப்பு. உயிருள்ள காலத்திலும் சிறப்பு; உயிர் நீங்கிய பின்னரும் சிறப்பு. கற்றோரின் சிறப்பு காலத்தை வென்று நிற்கக்கூடியது.

'கற்றவனுக்கு எந்தநாடும் சொந்தநாடு; எந்த ஊரும் சொந்த ஊர்' என்று கூறுகிறது திருக்குறள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் சிறப்பு படித்தவருக்கே பொருந்தும்.

தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் நம் தம்பி தங்கைகள் கல்வியின் இம்மாபெரும் சிறப்பை மனத்திற் கொள்ள வேண்டும். ஒரு நாட்டிற்குமட்டும் உரியவர்களாக வாழ்வது நன்றா? உலகுக்கே உரியவர்களாக வாழ்வது நன்றா?

கல்வி ஒருவனை உலகுக்கே உரியவனாக்கிவிடுகிறது.

வள்ளுவரும், ஷேக்ஸ்பியரும் உலகுக்கே உரியவர்களானது எப்படி? கல்வியாலும் புலமையாலும் அன்றோ?

அவ்வாறு உலக முழுமையும் வரவேற்கப் பெறுகின்ற புலமை நலத்தை நம் குழந்தைகள் பெற வேண்டும். சென்றவிடமெல்லாம் சிறப்புத்தருகின்ற கல்வி நலத்தை அரும்பாடுபட்டுத் தேட வேண்டும்.

ஆளுகின்ற நாட்டில் மட்டுமே சிறப்புண்டு புவி மன்னர்களுக்கு. அவர்களுடைய ஆணையும் சொல்லும் அந்த நாட்டின் எல்லைக்குள்தான் செல்லும். அதற்கு வெளியே அவர்களுக்குச் செல்வாக்கில்லை, சிறப்பில்லை, பெருமையில்லை.

கவி மன்னர்களுக்கும் கற்றவர்களுக்கும் ஆளுகின்ற நாடென ஒன்று தனியே இல்லையெனினும், உலகையே ஆளுகிறவர்கள் அவர்கள். அவர்களின்புகழுக்கு எல்லை இல்லை. எல்லை கடந்து உலகெங்கும் பரவிநிற்பது அவர்கள் புகழ்.

ஆளுகின்ற புவிமன்னர்கள் வேற்று நாட்டில் தம் ஆணையை நிலைநிறுத்த எண்ணினால் அந்நாட்டின்மீது படையெடுக்க வேண்டும். படை பலத்தாலேயே இன்னொரு நாட்டு மக்களை அவர்கள் வெல்ல முடியும்.

ஆனால் கவிமன்னர்களோ தம் புலமையாலேயேஉலகையெல்லாம் தம் செங்குடைக்குக் கீழ் கொண்டுவந்து விடுகின்றனர். போரில்லை, துன்பமில்லை, அழிவில்லை, கசப்பில்லை, வையகமே அவர்கள் வசப்பட்டுவிடுகிறது. புவிமன்னர்கள் உலக சக்கிராதிபதிகள் ஆவது இப்படி.

(32-ம் பக்கம் பார்க்க)

கடற்கரை மகிழ்வுலா

ஆகஸ்டு மாதம் பிரிட்டிஷ் மக்களுக்கு விடுமுறைக் காலம். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள், கடற்கரைப் பகுதிக்குச் சென்று உல்லாசமாகப் பொழுது போக்குவார்கள். ஆழி சூழ் மேடைகள் இருக்குமிடங்களிலும், நீர்த்துறை இருக்குமிடங்களிலும் நுழைவுச் சீட்டு வழங்கும் உண்டியில் கம்பத்தில் காசுகள் விழுந்து கொண்டேயிருக்கும்.

பிரிட்டிஷ் மக்களுக்கு ஆழி சூழ் மேடைகளில் அமர்ந்து பொழுதைக்கழிப்பதில் விருப்பம் அதிகம். 1822 ஆம் ஆண்டில் பிரைட்டன் நகரத்தில் ஆழிசூழ் மேடை அமைக்கப்பட்டது. உல்லாசப் பொழுது போக்கிற்காக உலகத்திலேயே முதல் முதலாக நிறுவப்பட்ட மேடை இது தான். இன்று பிரிட்டனில் பல பகுதியில் ஏறக்குறைய 300 ஆழி சூழ் மேடைகள் இருக்கின்றன.

பிரைட்டனில் நிறுவப்பட்ட ஆழிசூழ் மேடை, தொங்கு பாலம் அமைப்பு முறையில் எடுப்பான தோற்றத்தில் கட்டப்பட்டதாகும். கடலுக்குள் ஆயிரம் அடி நீளத்தில் அமைந்த இந்த மேடைக்குப் பன்னூறு ஆண்டுகளானாலும் பழுது ஏற்படாது என்று அதை நிருமித்தவர்கள் கூறினார்கள். ஆனால் 1896-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் வீசிய புயலில் அது சரிந்து விழுந்தது. அங்குப் புதியதோர் பாலம் அமைக்கும் முயற்சி தோன்றிற்று. 1899 ஆம் ஆண்டுவாக்கில்—1766 அடி நீளமுள்ள மேடை கட்டிமுடிக்கப் பட்டது. மாளிகை மேடை என்று பெயரிடப்பட்ட இது பல அம்சங்களில் நூதனமானது—சிறந்தது. மக்கள் காற்று வாங்குவதற்காக கடல் சூழ்ந்த மேடையில் சென்று அமர்ந்த காலம் மாறிற்று. அங்கு அமர்ந்தவாறே இசை கேட்டு மகிழ விரும்பினார்கள். மேடையின் முனையில் இசை அரங்கு தோன்றிற்று. மக்கள் தொகை பெருகியதால் பிறகு இடையில் ஒன்று நிறுவப் பட்டது.

விடுமுறையைக் கழிக்க பிரைட்டனுக்கு வருவோர் எண்ணிக்கை பெருகத் தொடங்கியதும், மேடையிலும் வசதிகள் பெருகின. இசை அரங்குக்குக் கும்பமும் கோபுரமும் அமைத்து கலையழகூட்டினார்கள். தீபாலங்காரம் செய்தார்கள். இன்று பிரைட்டனில் மாளிகை மேடையைத் தவிர, ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் மற்றோர் ஆழி சூழ் மேடையும் உண்டு. தீபாலங்காரம் செய்யப்படுவதால், இரவு நேரத்தில் இவை இரண்டும் கண் கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றன.

பிரைட்டனைப் போலவே பிளாக்பூலிலும் ஆழிசூழ் மேடை

கள் உண்டு. பிரைட்டனிலுள்ள மேடைகளைப்போல இவை வனப்பு மிக்கவையல்ல என்றாலும், இங்கும்மக்கள் பெருமளவில் கூடுகிறார்கள். எஸக்ஸ் மாவட்டத்தில் ஸவுத் எண்டு என்ற இடத்திலுள்ள ஆழிசூழ் மேடையும் கவர்ச்சிகரமானது. 1830 ஆம் ஆண்டில் இது மக்கள் உபயோகத்திற்காகத் திறந்துவிடப்பட்டது. அதன் பிறகு பல தடவைகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த மேடைப்பாலத்தின் தற்போதைய நீளம் ஏறக்குறைய $1\frac{1}{2}$ மைல். பல்லாயிரக்கணக்கான மின்சார விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டுள்ள இந்த மேடைப்பாலத்தில் உல்லாசப்படகுகள் ஒதுங்க இடமிருக்கிறது. காற்று வாங்கச் செல்வோருக்கு நடைபாதை உண்டு. நடக்கச் சளைத்தவர்களுக்கு ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்குச் செல்ல மின்சார ரெயில் வண்டி உண்டு. லங்காஷயரில் உள்ள ஸவுத்போர்ட்டிலும் நீளமான ஆழிசூழ்மேடை உண்டு. ஸ்கெக்னெஸ் பட்டினத்திலுள்ள மேடைப் பாலத்தில் கண்ணாடிக் கூரை வேய்ந்திருக்கிறார்கள்.

மேடைப் பராமரிப்புக்காக ஒவ்வோர் இடத்திலும் ஊழியர்குழு உண்டு. மேடையைத் துப்புரவாக வைத்துக் கொள்வதுடன் அங்குள்ள நூற்றுக்கணக்கான நாற்காலிகளையும் ஆயிரக்கணக்கான மின் விளக்குகளையும் சீராக வைத்துக்கொள்ளும் பொறுப்பை இவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

செயற்கை முறையில் வைரம்

இங்கிலாந்தில் டெட்டிங்டனிலுள்ள தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கூடத்தில் வைரக்கற்களைத் தயாரிக்கிறார்கள். அவை மிகவும் சிறியவைதான் என்றாலும் அவற்றைத் தயாரிக்க அமைக்கப்பட்ட பொறி ஆற்றல்மிக்கது என்பது உறுதியாகிவிட்டது. அந்தப் பொறி 0°c இதிலிருந்து 2000°c வரையில் எந்த வெப்பநிலையிலும் ஒரு சதுர அங்குலத்திற்கு 1,000,000 ராத்தல் அமுக்கம் ஏற்படுத்தக்கூடியது. இந்தப்பொறி சரியான முறையில் சரியான பதத்தில் அமுக்கமேற்படுத்தி கரியை மணியாக மாற்றுகிறதா என்பதைச் சோதித்தறியவே வைரக்கற்களைத் தயாரித்துப் பார்த்தார்கள். தொழிற்றுறையில் அல்லது வேறு துறைகளில் பயன்படுத்தக்கூடிய பெரிய வைரக்கற்களைத் தயாரிப்பது இங்குள்ள விஞ்ஞானிகளுடைய நோக்கமல்ல.

தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கூடத்தில் புதுப்புதுப் பொருள்களைக் கண்டுபிடிப்பதிலும் தொழிற்றுறைச் சிக்கல்களுக்கு விடை காண்பதிலும் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்போது ஜெட் எஞ்சின்கள் பிர

பலமடைந்து விட்டன. அவை எழுப்பும் ஓசை காதைத் துளைக்கிறது. இந்த ஓசையைக் குறைப்பதுபற்றி விஞ்ஞானிகள் சிந்தித்து வருகிறார்கள்.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் சக்கரமில்லாமல் தரை—நீர் பரப்புக்குமேல் காற்றழுத்தமுண்டாக்கிக்கொண்டு தத்திச்செல்லும் வாகனம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஹோவர்கிராஃப்ட் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த வாகனத்திற்கு ஏற்ற மோதார் உருவத்தை அமைப்பதில் விஞ்ஞானிகள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

விமானங்கள் ஒலியை விஞ்சும் வேகத்திலும் ஒலியைவிட ஐம்மடங்கு வேகத்திலும் பறக்கும்போது ஏற்படக்கூடிய கோளாறுகளையும் சிக்கல்களையும் நீக்குவது பற்றி டெட்டிங்டன் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள். ஒலியைவிடப் பன்மடங்கு வேகத்தில் பறக்கும்போது விமான எஞ்சினில் வெப்ப மதிகரிக்கிறது. மணிக்கு நாலாயிரம் மைல் வேகத்தில் பறக்கவேண்டும் என்றால் தரை மட்டத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான அடிகள் உயரத்தில் பறக்கவேண்டும். மேலே செல்லச்செல்ல காற்றழுத்தம் குறைந்து பிரயாணிகளுடைய உடல் பாதிக்கப்படும். டெட்டிங்டன் விஞ்ஞானிகள் 7000°c வெப்பமுள்ள சுரங்கங்களையும் காற்றழுத்தம் குறைந்த குகைகளையும் அமைத்துக் கொண்டு சோதனைகளை நடத்திப் பார்க்கிறார்கள்.

விஞ்ஞானிகள் உலகின் பல பகுதிகளில் நடைபெறும் ஆராய்ச்சிப் பணிகளைத் தெரிந்து கொள்வது அவசியம். பிறமொழிகளில் வெளிவரும் விஞ்ஞானக் கட்டுரைகளையும் அறிக்கைகளையும் மொழி பெயர்க்கும் எந்திரம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் தேசிய பௌதீக ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். செய்திகளைத் தொகுத்து வழங்கும் கம்பூட்டர் பொறிகளை அபிவிருத்தி செய்வதிலும் அணுஉலை ஆராய்ச்சியிலும் தேசிய பௌதீக ஆராய்ச்சி நிலையம் தனிக்கவனம் செலுத்தத் திட்டமிட்டிருக்கிறது.

கல்வித் துறைச் செய்திகள்

ஹிந்தி பரீட்சையில் குறைந்த மார்க்கு கட்டாயமில்லை

அகாடமிக் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேறியது

1962-ம் வருஷத்திலிருந்து உயர்தரப்பள்ளிகளில் எஸ். எஸ். எல். ஸிக்குப் பதிலாக 10-வது வகுப்பு பரீட்சை இறுதிப் பரீட்சையாக இருக்குமாதலால், கல்லூரிகளில் சேர்வதற்குத் தகுதி வாய்ந்த முறையில் குறைந்தபட்சம் எவ்வளவு மார்க் பெறவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் தீர்மானம், சென்னைப் பல்கலைக் கழகம் அகாடமிக் கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கவுன்சில் கூட்டத்திற்கு சென்னை பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் தலைமை வகித்தார்.

இத்தீர்மானத்தின் பிரகாரம் மேற்கண்டவாறு தேர்ச்சி பெற ஒரு மாணவன் தாய்மொழி அல்லது பிரதேச மொழியில் 40 சதவீதமும், ஆங்கிலத்தில் 40 சதவீதமும், மற்றும் கணிதம், பொது விஞ்ஞானம், சமூகம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டில் ஒவ்வொன்றிலும் 35 சதவீதமும், ஒன்றில் 30 சதவீதமும் மார்க் பெறவேண்டும். மொத்த மார்க் 600ல் குறைந்தது 225 மார்க் வாங்கவேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகளில் 11-வது வகுப்பு ஏற்படுத்தப்பட்டால், அதில் தேறுவதற்கான குறைந்த பட்ச மார்க்கையும் கவுன்சில் நிர்ணயித்தது. இப் பரீட்சையில் தேற தாய் மொழியில் 40 சதவீதமும், ஆங்கிலத்தில் 40 சதவீதமும், கணிதம், விஞ்ஞானம், சமூகம், மூன்றாவது மொழி ஆகிய நான்கில் ஏதாவது மூன்றில் 35 சதவீதமும் வாங்கவேண்டும்.

இத்தீர்மானங்களைத் திரு. பி. சவரி ராயன் பிரேரித்தார். தீர்மானங்களை ஆதரித்துக் கல்வித் துறை நெறியாளராகிய திரு. என். டி. சுந்தரவடிவேலு பேசுகையில் ஆங்கிலோ இந்திய பள்ளிகள் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு மாணவ மாணவிகளைத் தயாரிக்கும் பள்ளிகள் ஆகியவற்றில் இரண்டு மொழிகளை கற்றுக் கொடுப்பதாகவும், ஆனல் இதர பள்ளிகளில் மாத்திரம் மாணவர்கள் 3 மொழிகளிலும் தேற வேண்டும் என்பது சரியல்ல என்றும், ஒவ்வொரு மாணவரும் 3 மொழிகள் படிக்க வேண்டுமென்ற திட்டம் நம் ராஜ்யத்தில் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும், இரண்டாவது மொழியாக

சமஸ்கிருதம், ஹிந்தி, உருது, மலையாளம் போன்ற எந்தமொழி யாவது மாணவன் எடுத்துக் கொள்ளலாமென்றும், இவற்றில் கட்டாயம் பரீட்சையும் எழுத வேண்டுமென்றும் ஆனால் இந்த மொழிப் பரீட்சையில் இவ்வளவு மார்க் குறைந்தபட்சமாக வாங்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட வில்லை என்றும் விளக்கிக் கூறினார்.

பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம்

ஆரம்பப் பள்ளிகள், உயர் நிலைப்பள்ளிகள், அங்கஹீனமான வர்களுக்கு கல்வி புகட்டும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் ஆசிரியர்களின் சிறப்பான சேவையைக் கருதி அவர்களுடைய குழந்தைகளில் திறமை வாய்ந்தவர்களின் படிப்பிற்கு உதவியளிக்க இந்திய அரசினர் முடிவு செய்துள்ளனர். இதை யொட்டி இந்த ஆசிரியர்களின் திறமைசாலிகளாக உள்ள குழந்தைகள் உயர்தரக் கல்வி பெறுவதற்காகத் திறமை அடிப்படையில் உபகாரச் சம்பளம் அளிக்கும் திட்டம் ஒன்றினை மத்திய அரசினர் மூன்றுவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்த்துள்ளனர். பள்ளி இறுதி வகுப்பு தேர்வில் மாணவர்கள் பெறும் மார்க்கு அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் உபகாரச் சம்பளங்கள் அளிக்கப்படும்.

மூன்றும் திட்டக் காலத்தில் ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் தருவதற்காக, தமிழ் நாட்டுக்கு ஆண்டுக்கு 47 உபகாரச் சம்பளம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆரம்பப் பள்ளிகள், உயர்தரப் பள்ளிகள், அங்கஹீனமானவர்களுக்குக் கல்வி புகட்டும் நிறுவனங்கள் (மத்திய தரப் பள்ளிகள் உள்பட) ஆகியவற்றில் தற்போது பணிபுரியும் ஆசிரியர்களின் குழந்தைகள் மெட்ரிக், எஸ். எஸ். எல். சி. பரீட்சைகளிலும் அதற்குச் சமதையான பரீட்சைகளிலும் இந்த ஆண்டு சர்வகலாசாலை புதுமுக வகுப்பிலும் முதல் வகுப்பில் தேறியிருந்தாலும், (வகுப்பு குறிப்பிடப்படாத இடங்களில் 60 சதவீத மார்க் பெற்றிருந்தாலும்) அவர்கள் இந்த உபகாரச் சம்பளம் பெறுவதற்காக விண்ணப்பம் செய்யலாம். முந்திய ஆண்டுகளில் நடைபெற்ற பள்ளி இறுதியாண்டுத் தேர்வுகளில் ஆஜரான மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.

விண்ணப்பம் செய்துகொள்ளும் மாணவர்கள் பெற்ற மொத்த மார்க்குகளின் சதவிகிதத்தை அடிப்படையாகக் கொண்டு தகுதி அடிப்படையில் தான் இந்திய அரசினர் உபகாரச் சம்பளம் அளிப்பார்கள்.

1961-62ம் ஆண்டுக்கான உபகாரச் சம்பளம் பெற விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுகின்றன. விண்ணப்பாரங்களையும் இதர தகவல்களையும் கல்வித் துறை நெறியாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சென்னை-6ல் உள்ள கல்வித் துறை நெறியாளருக்கு 20-9-1961க்குள் வந்து சேர வேண்டும்.

3 வது திட்ட முடிவிற்குள் மாநிலம் முழுதும் கட்டாயக் கல்வி அமுல்

மூன்றாவது திட்டகாலத்திற்குள் தமிழ்நாடு பூராவிலும் கட்டாயக் கல்வி திட்டம் அமுலாகிவிடும். பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு விடுவர் என்று மாநிலக் கல்வி நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அண்மையில்சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது அறிவித்தார்.

திரு. ஏ. ஆர் மாரிமுத்து கேள்விக்கு மந்திரி பதிலளித்தபோது பெற்றோர்களிடம் கல்வி அறிவின் அவசியத்தை உணர்த்துதல், ஏழைக்குழந்தைகளுக்கு இலவச மதியஉணவு, புத்தகம், பலகை சீருடை, பள்ளிசீரமைப்பு மாநாடு முதலியவைகள் மூலம் பள்ளிகளில் அதிகமான குழந்தைகள் சேருகின்றனர். இம் முறைகள் மேலும் அதிகரிக்கப்படும் என்றார். ஏற்கனவே கட்டாயக்கல்வி அமுலாகியுள்ள பகுதிகளில் ஏறத்தாழ நூற்றுக்கு நூறு பள்ளி வயதுக் குழந்தைகள் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர் என்றார்.

கட்டாயக் கல்விமுறை அமுலாகியுள்ள பகுதிகளில் பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்துத் தண்டனை விதிக்கலாம். இதன்படி 1959-60ம் ஆண்டில் 2, 413 பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இத்தகைய தண்டனை முறைகளைவிட, ஆரம்பத்தில் குறிப்பிட்ட 'ஊக்குவிக்கும்' முறைகளால் அதிக பலன் ஏற்படுகின்றது. அவைகளே பெரிதும் பின்பற்றப்படும் என்றும் மந்திரி ஒரு கேள்விக்குப் பதில் கூறினார்.

டெலிவிஷன் மூலம் கல்வித் திட்டம்

தனியார் நிறுவனமும் முன்வரலாம்

தமிழ்நாட்டில் கல்வி புகட்டும் நோக்கத்திற்காகப் பள்ளிகளில் டெலிவிஷன் அமைக்கும் உத்தேசம் உள்ளது. இதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட்டு இந்திய சர்க்கார் ஒப்புதலும் பெற்ற பிறகுதான் இறுதியான முடிவு மேற்கொள்ளப்படும் என்று கல்வி மந்திரி திரு. சி. சுப்ரமணியம் இன்று சட்டசபையில் திருவாளர்கள் என். கே. பழனிசாமி (கம்யூ), எஸ். எம். அண்ணாமலை

(சுயே) கேள்விகளுக்குப் பதில் கூறும்போது அறிவித்தார்.

பொதுமக்களுக்கான டெலி விஷன் அமைக்கும் திட்டத்தை யேற்று நடத்த தனியார் ஸ்தாப னங்கள் முன்வந்தால் அவற்றை மத்திய சர்க்கார் பரிசீலித்து முடிவு செய்யும் என்றும் அவர் ஒரு கேள்விக்குப் பதில் சொன் ஞர்.

ஏழை மாணவர்களுக்கு இலவச உடை வழங்கத் திட்டம்

அடுத்து அரசினர் மேற்கொள்வர்

ஏழைப் பள்ளி மாணவருக்கு பகலுணவு அளிக்கும் திட்டத் துக்கு அடுத்தபடியாக இலவச உடை வழங்கும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று சட்டசபையில் மந்திரி திரு. சுப்ரமணியம் சொன்ஞர்.

ஏழை சிறுமிகள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்க இலவச ஆடைகள் பொது மக்கள் உதவி யால் வழங்கப்படுகின்றன.

மாணவிகளிடையே ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்காகச் சீருடைகள் வழங்கப்படுகின் றன.

3 லட்சத்து 57 ஆயிரத்து 429 மாணவிகளுக்கு ரூ. 20 லட்சம் செலவில் ஒரு "செட்" ஆடை கள் வழங்கப்பட்டன என்று மந்திரி தெரிவித்தார்.

திரு. ஆசைத்தம்பி: தெருத் தெருவாக ஆசிரியர்கள் ஆடை வசூலிப்பதற்குப் பதிலாக அர சாங்கமே ஆடைகளை வழங்குமா?

மந்திரி: பொது மக்களிட மிருந்து அவர்களாகக் கொடுப் பதை ஆசிரியர்கள் வசூலிப்பதில் தவறில்லை.

திரு. விஞயகம்: வசூலிக்கப் பட்ட அளவுக்கு அரசாங்கமும் உதவுமா?

மந்திரி: இறுதியில் அரசாங் கமே பகலுணவுத் திட்டம் போல ஏழைக் குழந்தைகளுக்கு ஆடைகள் வழங்கத் திட்டம்போட முடியும். அது வரையில் பொது மக்கள் உதவியைக்கொண்டு ஆடைகள் வழங்கலாம்.

திரு. மருதாசலம்: உணவுக் கும் ஆடைக்கும் ஆசிரியர்கள் வசூலிக்கப் போனால் இதே உங் கள் தொழிலா என்று சிலர் கேட்கிறார்கள். ஆகவே அரசாங் கமே இவற்றைச் செய்யுமா?

மந்திரி: அரசாங்கம் வரி போட்டு செய்வதை விட மக்களே மனமுவந்து அளிப்பது நல்லது.

ஆசிரியருக்கு வீட்டு வாடகை

ஜில்லா போர்டு, அரசாங்க உதவி பெற்று நடக்கும் பள்ளி களின் ஆசிரியர்களுக்கு அர சாங்க சிப்பந்திகளுக்குப் போல வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கவேண்டும் என்று திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி தீர்மானம் கொண்டு வந்தார்.

இந்த அலவன்ஸ் கொடுப்பதால் ரூ. 6 லட்சமே அதிகச்செலவாகுமென அவர் கூறினார்.

சமீபத்தில்தான் கணிசமான அளவு சம்பள உயர்வு ஆசிரியர்களுக்குக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விஷயத்தை அரசாங்கத்தின் முடிவுக்கு விட்டுவிடும்படி மந்திரி திரு. சுப்ரமணியம் பதிலளித்தார். வீட்டு வாடகை அலவன்ஸ் உயர்வால் ரூ. 25 லட்சம் செலவாகும் என்றார்.

தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு தோற்றுப் போனது.

பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு மூன்றாம் திட்டத்தில் அதிக நிதி வசதி

மக்கள் சபையில் அமைச்சர் தகவல்

மூன்றாம் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 43 சதம் பெண்கள் கல்வி வளர்ச்சிக்கு. எனவே பெண்கள் படிப்பு வளர்ச்சி பணம் இல்லை என்பதால் பாதிக்கப்படமாட்டாது. ஆனால் பெண் கல்விக்கு பொது மக்கள் அதிக ஆதரவு தரச் செய்ய பொதுஜன இயக்கம் தேவைப்படுகிறது.

அண்மையில் மக்கள் சபையில் இது சம்பந்தமாக நடந்த அரை மணிநேர விவாதத்துக்குப் பதிலளித்த கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி மேற்கண்டவாறு தகவலளித்தார்.

மந்திரி இப்பிரச்னையை மேலும் விளக்குகையில் 3-ம் திட்டத்தில் பொதுக் கல்விக்காக ரூ. 400 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 175 கோடி பெண்கள் கல்விக்கு மாத்திரம் செலவிட ராஜ்யங்கள் அரசாங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது கல்விக்குஒதுக்கப்பட்டமொத்தத் தொகையில் 43 சதவிகிதம் பெண்கள் கல்விக்காகும் என்று கூறினார்.

மற்றும் பெண்கள் கல்வி விசேஷ நடவடிக்கைகளுக்காக ராஜ்யங்கள் செலவிடும் ரூ. 11 கோடி முழுவதும் அந்த வேலைக்கு பயன்படுத்தப்படும் என்றும் மற்றும் திட்ட முன்னேற்ற நிலவரத்தைக் கவனித்துத் தேவைப்பட்டால் தேவைபட்டபோது தேவையான ஏற்பாடுகள் செய்யவும் திட்டக் கமிஷன் உறுதி கூறியிருப்பதாகவும் மந்திரி கூறினார்.

மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி கல்வி வளர்ச்சி ஏற்பாடுகளை விளக்குகையில் "மூன்றாம் திட்ட முடிவுவாக்கில்எல்லாருக்கும் இலவசத் துவக்கக் கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம். துவக்கப்படிப்பு வளர்ச்சி விஷயத்தில் பணம் தடையாக இருக்காது என்று அரசாங்கம் இப்போது முதல் தடவையாக உறுதியான முடிவெடுத்துள்ளது. ஆனால் அதிகமான மாணவர்களைப் பள்ளியில் சேர்க்குமாறு பொது ஜனங்களிடையே பிரச்சாரம் செய்து ஆதரவு தேடித் தருவது மக்களின் கடமையாகும்" என்று தெரிவித்தார்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press 2/65, Broadway, Madras-1.